பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

கூடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 09 புதன்கிழமை (21-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:148

தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பிக்களுக்கு தலைவர் பிரபா வாழ்த்தும் அறிவுரையும்!

தமிழ்த் தேசியத்துக்கு உழைப்போமென அவர்கள் உறுதியுரை

கிளிநொச்சி,ஏப்ரல்21

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் இருபத்தியிரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தலைவர் வே.பிரபாகரன் நேற்றுக் கிளி நொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடி அவர்களோடு விருந்துண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டமைக் காக அவர்களுக்கு வாழ்த்துத்தெரிவித்த தலைவர் பிரபாகரன், ஈழத்தமிழ் மக்களின் ஆணையை ஏற்று முன்னெடுப்பதில் அர்ப் பணிப்போடு செயற்படவேண்டும் என்று அவர்களுக்கு அறிவுரை கூறினார்.

தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்களும், தாங்கள் தமிழ்த்தேசியத் துக்காகவும் ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை வலுப் படுத்துவதற்காகவும் எமது மண்ணினதும் மக்களினதும் விடு தலைக்காகவும் ஒரணியில் நின்று அயராது உழைப்பார்கள் என்று தலைவர் பிரபாகரனுக்கு உறுதியுரை வழங்கினார்கள்.

நேற்று முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களைத் தலை வர் பிரபாகரன் சந்தித்து உரையாடினார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப்பணியகத்தில் அகவணக்கத்துடன் இந் தச்சந்திப்பு ஆரம்பமானது.

கூட்டமைப்பினருடன் சந்திப்பு

தலைவரோடு புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், உளவுத்துறைப் பொறுப் பாளர் பொட்டம்மான், நிதித்துறைப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி, காவல்துறைப்பொறுப்பாளர் பா.நடேசன், தளபதி கேணல் சொர்ணம், கிட்டு மோட்டார் படைய ணித் தளபதி கேணல் பானு, கேணல் துர்க்கா, புலி களின் பெண் போராளிகள் படையணியின் தளபதி கேணல் விதுஷா, அரசியல் பொறுப்பாளர்களான சி.இளம் பரிதி (யாழ்.மாவட்டம்), திலக் (திருகோணமலை மாவட்டம்), கௌசல்யன் (மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டம்), எழிலன் (வவுனியா மாவட்டம்), அமிர்தாப் (மன்னார் மாவட்டம்), அரசியல்துறை துணைப் பொறுப்பாளரான சோ.தங்கன், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகி யோரும் இந்தச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்திப்பில் கலந்துகொண்டனர். மட்டக்களப்பு மாவட்ட திலிருந்து தெரிவான கிங்ஸ்லி இராசநாயகமும் வன் னிக்கு வந்திருந்தபோதிலும், அவர் இந்தச்சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை. அவர் தமது பதவியை இராஜி ணாமச் செய்ததையடுத்து, அவரது இடத்துக்கு விருப்பு வாக்கு அடிப்படையில் எம்.பியாகும் அரியநேந்திரன் நேற்றைய சந்திப்பில் பங்குபற்றினார்.

நேற்றைய சந்திப்பின் ஆரம்பத்தில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட எம்.பிக்களுக்கு தலைவர் பிரபா கரன் வாழ்த்துத்தெரிவித்தார். அதன் பின்னர் தமது உரையில் அவர் கூறியதாவது:-

"தமிழீழ மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட நீங்கள் ஒவ்வொருவரும் (14ஆம் பக்கம் பார்க்க)

கருணா தரப்பில் உயிரிழந்தோரையும் மாவீரர்களாக அறிவிக்கக் கோரிக்கை

தலைவரிடம் நேரில் தெரிவிப்பு; பரிசீலிக்கலாம் என அவர் பதில்

கிநிநொச்சியில்,ஏப்.21

கருணா குழுவினரின் பிடியிலி ருந்து மட்டக்களப்பு, அம்பாறைப் பிர தேசங்களை மீட்ட சமயம் கருணா குழுவின் தரப்பில் உயிரிழந்த வீரர் களையும் மாவீரர்களாக அறிவிக்க வேண்டும்.

- இவ்வாறு தலைவர் பிரபாகரனி டம் நேற்றைய சந்திப்பின் போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தமிழ்க்கூட்டமைப்பின் சார்பில் நாடாளு மன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள அரியநேந்திரன் இவ்வாறு கோரினார்.

"எமது பிரதேசம் 41 நாள்கள் கருணாவின் கொடூரப்பிடியிலிருந்த சமயத்தில் நேர்ந்த அனர்த்தங்களுக் காக மட்டக்களப்பு மக்களின் சார் பாக உங்களிடம் மன்னிப்புக்கோரு (14ஆம் பக்கம் பார்க்க)

சந்திரசேகரன், மனோகணேசன் இருவரும் பிரபாவுடன் சந்திப்பு

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், மேல் மாகாண மக்கள் முன்னணித் தலை வர் மனோகணேசன் ஆகியோரும் தமது குழுவினர் சகிதம் நேற்றுப்பிற் பகல் தனித்தனியாக தலைவர் வேபிர பாகரனைச் சந்தித்துப் பேசினார்கள்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள அரசியல்துறை நடுவப்பணியகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், புலனாய் வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம் (14ஆம் பக்கம் பார்க்க)

சந்திரசேகரனுக்கு வரவேற்பு

மனோகணேசனுடன் பேச்சு

சபாநாயகர் தெரிவு விடயம்:

22 தமிழ் எம்.பிக்களும் இறுதி நேரத்தில் முடிவு!

கொழும்பு,ஏப்.21

சபாநாயகர் தெரிவு விடயத்தில் எவ்வாறு நடந்துகொள்வது என்பது குறித்துத் தமிழ்க்கூட்டமைப்பு எம்பிக் கள் இறுதிநேரத்திலேயே தீர்மானிப் பார்கள் என்று தெரியவருகிறது.

நேற்றுக் கிளிநொச்சியில் தலைவர் பிரபாகரனைச் சந்தித்த பின்னர் மாலை யில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதி நிதிகள் புலிகளோடு இவ்விடயம் - (14ஆம் பக்கம் பார்க்க)

சுதந்திரக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் கூட்டம் இன்று

சபாநாயகர் தெரிவுமற்றும் ஆளும் கட்சியின் நாடாளுமன்றப் பதவிகள் தொடர்பான விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் நாடாளுமன் றக் குழு இன்று கூடுகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந் தக் கூட்டத்துக்குத் தலைமை வகிப் பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாளை நடைபெறவிருக்கும் சபா நாயகர் தெரிவு தொடர்பான விடயத் (14ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் இனத்தின் அரசியல் இலக்கை அடைய புலிகள் தமது பூரண ஒத்துழைப்பைத் தருவர்

இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு

தமிழ்மக்கள் ஆணைப்படி எமது இனத்தின் அரசியல் இலக்கை அடைய விடுதலைப் புலிகள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவர். இந்த உறுதிமொழியை விடுதலைப் புலிக ளின் தலைவர் வே.பிரபாகரன் எமக் குத் தந்துள்ளார்.

- இப்படிக் கூறியுள்ளார் தமிழ்க் கூட்டமைப்பின் மூத்த தலைவர்களில ஒருவரான இரா.சம்பந்தன்.

நேற்றைய சந்திப்பை அடுத்து செய்தியாளர்களிடம் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்றைய பேச்சின் போது தற் போதைய அரசியல் நிலை, தமிழ் மக்களின் எதிர்காலம், எதிர்காலத் தில் எவ்வாறு கூட்டமைப்பு எம்.பிக் கள் செயற்படுவது என்பவை குறித் துக் கலந்துரையாடினோம்.

எல்லோரும் ஒற்றுமையாக - ஒரு மித்த நிலைப்பாட்டுடன் - செயற்பட்டு (14ஆம் பக்கம் பார்க்க)

நான் உங்கள் புத்தாண்டு. உங்களுக்கொரு அன்பளிப்பு வைத்திருக்கின்றேன்.

உங்களுக்கு வெற்றிகரமான ஆரம்பம். ரூ.50,000 அல்லது அதற்கு மேலதிகமான தொகையை கால வைப்புச் செய்பவர்களுக்கு, தேசிய சேமிப்பு வங்கி விசேட அன்பளிப்பை வழங்குகிறது. 2004 ஏப்பிரல் 14 - 21 வரை மட்டுமே இச்சலுகை.

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

NSB தேசிய சேமிப்பு வங்கி

PHOENIX (Pvt) Ltd

புதிய அரசின் பேச்சுக்கான திட்டங்கள் புலிகளின் நிலைப்பாட்டுக்கு மாறானவை

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ சஞ்சிகை கருத்து

கிளிநொச்சி, ஏப்.21

"புதிய கூட்டணி அரசு விரும்பும் சமாதானப் பேச்சுக்களின் திட்டங்கள் புலிகள் இயக்கத்தின் போரியல் நிலைப்பாட்டிற்கு முரணாகவே உள்ளன."

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ சஞ்சிகையான 'விடுதலைப் புலிகள்' இதழின் பங்குனி - சித்திரை வெளியீட்டில் 'தமிழரின் ஆணையும், சிங்கள வரின் ஆசையும்' என்ற தலைப்பில் பிரசுரமான ஆசிரியர் தலையங்கத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈழத் தமிழ் அரசியல் வரலாற்றில் என்றும் மிளிர்ந்து கொண்டிருக்கப்போகும் ஒரு கலங்கரை விளக்காக 2004 ஆம் ஆண்டின் ஏப்ரல் இரண்டாம் நாள் திகழப்போகின்றது.

தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்ற தமிழரின் அரசியல் அபிலாஷைகளுக்கு மக்கள் ஒன்றிணைந்து வழங்கிய அரசியல் ஆணையின் அதிகார பூர்வ நாளாக அன்றைய தினம் அமைந்துள்ளது. தமிழரின் அரசியல் பிரதிநிதிகள் புலிகள் தான் என்பதை மக்கள் அனைவரும் ஒன்று பட்டு வாக்களித்து உலகிற்குப் பறை சாற்றிய நாளும் அதுதான்.

தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கில் தமிழர் கூட்டமைப்பு பெற்றுள்ள அமோக வெற்றி புலிகளின் அரசியல் பலத்தையும் உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளது. ஸ்ரீலங்கா நாடாளுமன்றின் மூன்றாவது பெரிய அரசியல் கட்சியாக 22 ஆசனங்களுடன் தமிழர் கூட்டமைப்பு இடம்பெற்றுள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலத்திற்கும் போரியல் வரலாற்றில் புலிகள் இயக்கம் தமது இராணுவ பலத்தை ஆணித்தரமாக வெளிப்படுத்தியுள்ளது. இப்போது அரசியல் தளத்தில் புலிகளின் தலைமைத்துவமும் அதன் ஆற்றலும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

இவ்விதம், அரசியல் - இராணுவ ரீதியில் ஈழத்தமிழர்களின் ஏக தலைமையாக புலிகள் இயக்கமே உள்ளது. நிரூபிக்கப்பட்டுவிட்ட இந்த அரசியல், இராணுவ யதார்த்தத்தை சிங்கள தேசமும், சர்வதேசமும் இனி மேல் மனதில் நிறுத்திக்கொண்டு தமது அரசியல் நகர்வுகளை மேற் கொள்ளும் என நம்பலாம்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வுகாணும் உறுதிப்பாட்டோடு புலிகள் இயக்கம் உள்ளது. இந்த நோக்கத்துடன் முன்னைய அரசோடு ஒரு தொடர் பேச்சுக்களைப் புலிகள் இயக்கம் சுமுகமாக நடத்தி வந்தது.

சிங்கள அரசுடன் எட்டப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டையும், புலிகள் இயக்கம் சரியாகக் கடைப்பிடித்து வருகிறது. எனினும், தமிழ் மக்களைப் போல் சிங்களவரின் வாக்குத் தீர்ப்பு சமாதானத்துக்கான தெளிவான மக்கள் ஆணையாக இருக்கவில்லை. குழப்பகரமான தலைமையையும் அவர்கள் ஆட்சியில் அமர்த்தியுள்ளனர்.

ரணிலின் கட்சியினர் தமிழர் பகுதியின் யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு ஓர் உறுதியான சமாதானத்திற்கு

(13ஆம் பக்கம் பார்க்க)

பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

ஏதிர்வரும் சனிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ள ஜி.சீ.ஈ.உயர்தரப்பரீட்சை உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம், வலிகாமம் வலயம், வடமராட்சி வலயம், கோப்பாய் பிரதேசம் ஆகியவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக நடைபெறும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றை உள்ளடக்கிய சகல உத்தியோகத்தர்களையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-152)

இராஜசிறிகாந்தன் காலமானார்

'தினகரன்' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் இராஜ சிறிகாந்தன் நேற்றுக்காலை மாரடைப்பால் காலமானார்.

சிறந்த ஆக்க இலக்கியகர்த்தாவான இவர், இலங்கையின் இடதுசாரி இயக்கத்தில் ஈடுபாடுகொண்டிருந்தவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் இவரும் ஒருவராவார். சோவியத் குடியரசின் வெளியீடான 'சோவியத் நாடு', 'சோஷலிசம் தத்துவமும நடைமுறையும்' ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரிய பீட உறுப்பினராகவும் இவர் விளங்கினார். இலக்கிய ஆக்கங்களுக்காக மூன்று தடவைகள் அகில இலங்கை சாகித்திய விருதுகள் பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கைதடி, நாவற்குழி, கோயிலாக்கண்டியில் மீளக்குடியமர்ந்தோருக்கு 25 ஆயிரம் ரூபா

உடனடியாக வழங்குமாறு அரச அதிபர் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.21

தென்மராட்சியில் கைதடி நாவற்குழி மற்றும் கோயிலாக்கண்டி ஆகிய பகுதிகளில் அண்மையில் மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு உடனடியாக 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்மாவட்ட அரச அதிபர், தென்மராட்சிப் பிரதேச செயலருக்குப் பணித்துள்ளார்.

யாழ்.மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்வு தொடர்பான இணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் செபமாலை தலைமையில் நடைபெற்றது.

யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, தலைமைச் செயலக உதவி அரச அதிபர் வே.வீரபத்திரபிள்ளை மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

பாதுகாப்புப் படையினரால் அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். இவற்றை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கலந்துரையாடலில் கலந்துகொண்டோர் யாழ்.அரச அதிபரிடம் சுட்டிக் காட்டினர். இதனை அடுத்து அப் பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கு ஒன்றிணைக்கப்பட்ட உதவித்திட்டத்தின் கீழ் 25 ஆயிரம் ரூபாவை உடனடியாக வழங்குமாறு அப்பகுதி பிரதேச செயலருக்கு அரச அதிபர் உத்தரவிட்டார். அத்துடன், ஜி.ரி.இசர், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் போன்ற சர்வதேச தொண்டு நிறுவனங்களும் இந்த மக்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்க முன் வரவேண்டும் எனவும் அரச அதிபர் கோரிக்கைவிடுத்தார்.

யாழ்குடாநாட்டில் அண்மைக்காலமாக சட்ட விரோத மணல் அகழ்வு, சட்ட விரோதமாக மரம் கடத்தல் போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அவற்றைத் தடுப்பதற்கு ஒவ்வொரு பிரதேச செயலர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அரச அதிபர் பணிப்புரை விடுத்தார்.

'நியாப்' மற்றும் 'நிகொட்' போன்ற அமைப்புக்களால் யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் முதலாம் கட்ட வேலைத் திட்டங்கள் யாவும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தினுள் நிறைவு செய்யப்படவேண்டும் எனவும் நேற்றைய கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புத் தொடர்பான செயற்பாடுகள், அதில் உள்ள குறைகள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. (ஐ-5)

உரத்தின் விலை குறைப்பு

கொழும்பு,ஏப்.21

அடுத்த மாதத்தில் இருந்து உரத்தின் விலை 200 ரூபாவால் குறைக்கப்படும் என்று நிதி அமைச்சர் சரத் அமுனுகம அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இந்த அறிவிப்பை விடுத்தார். தற்போது 800 ரூபாவாக இருக்கும் உரத்தின் விலை மே மாதம் முதலாம் திகதியில் இருந்து 600 ரூபாவாகக் குறைக்கப்படவுள்ளது.

தனியார் துறைகளில் பட்டதாரிகளுக்கு வேலை

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு 'சரசவி' எனும் திட்டத்தின் கீழ் தனியார் துறைகளில வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு யாழ்ப்பாணம் வர்த்தக தொழில துறை மன்றம் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள நூற்றுக் கணக்கான பட்டதாரிகள் எவ்வித வேலைவாய்ப்புக்களும் இன்றி நிர்க்கதியாக உள்ளனர். அவர்களுக்கு 'சரசவி' என்ற திட்டத்தின் கீழ் யாழ்மாவட்டத்திலுள்ள தனியார்துறைகளில் வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன. அவ்வாறு வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கப்படும் பட்டதாரிகளுக்கு மாதாந்தம் 6ஆயிரம் ரூபா வற்று மேற்பட்ட தொகை ஊதியமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது - என்று யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில் மன்ற இயக்குநர் கலாநிதி கீத பொன்கலன் தெரிவித்தார்.

இத்திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் வேலையற்ற பட்டதாரிகள் தமது விவரங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்பதாக புதிய செம்மணி வீதி, முத்தரைச்சந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள தமது அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-5)

இளம்பெண் கொலை தொடர்பாக

ஈ.பி.டி.பி உறுப்பினர் கைது மே 1 வரை விளக்கமறியல்

ஊர்காவற்றுறைப் பகுதியில் கடந்த வருடம் இளம் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பியின்) முக்கிய உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

கடந்த ஆண்டு மே மாதம் முதலாம் திகதி ஊர்காவற்றுறைப் பகுதியில் சமுர்த்தி (வறுமை ஒழிப்பு) அதிகாரியாகப் பணிபுரிந்த ரி.ஜெகதாஸ் ஜெனஸ்ரி (வயது 24) என்ற இளம் பெண் படுகொலை செய்யப்பட்டார். இந்தக் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே திருஞானம் சிவக்குமார் (வேலு) என்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர் கைது செய்யப்பட்டார்.

கடந்த வார இறுதியில் ஈ.பி.டி.பியின் யாழ்அலுவலகத்துக்கு அருகே நடமாடிக் கொண்டிருந்த சமயம் கைது செய்யப்பட்ட இவரை, கடந்த சனியன்றே ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ.பிரேம்சங்கர் முன்னிலையில் பொலீஸார் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபரை மே முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

வெளிவிவகார அமைச்சுக்கு புதிய செயலாளர் நியமனம்

பேர்னாட் குணதிலக ஐ.நாவுக்கு

தற்போது தாய்லாந்துக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றும் எஸ்.பலிகார இலங்கை வெளிவிவகார அமைச்சின் புதிய செயலாளராகப் பதவியேற்கின்றார்.

இதுவரை வெளிவிவகார அமைச்சின் செயலாளராகவும், இலங்கை அரசின் சமாதானச் செயலகத்தின் தலைவராகவும், சீனாவுக்கான இலங்கைத் தூதுவராகவும் பணியாற்றி வந்த பேர்னாட் குணதிலக நியூயோர்க்கில் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாகப் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சின் புதிய செயலாளராகப் பதவியேற்கும் பலிகார பொது மற்றும் வெளிவிவகாரச் சேவையில் சுமார் 35 வருட அனுபவமுடையவர்; முன்னர் ஜெனீவாவில் ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும் நியூயோர்க்கில ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாகப் பணிபுரிந்த சார்லி மகேந்திரன் உட்பட மூன்று வெளிநாட்டுத் தூதுவர்கள் புதிய அரசு பதவியேற்றதை அடுத்து தமது பதவிகளை இராஜினாமாச் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னைய அரசின் காலத்தில் வெளிநாட்டுத் தூதுவர்களாக நியமிக்கப்பட்ட மேலும் பத்துப்பேர் இடமாற்றம் செய்யப்படலாம் என அறியவருகின்றது. (க)

எங்கள் மனதிலே கர்வமும் அகங்காரமும் நீங்குவதற்கு மாற்றுவழியைக் காண்பிக்கிறோமா?

சுவாமி ரமண சைதன்யா கேட்கிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.21

கொழும்பு, மலையகம், திருமலை, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் 1996 ஆம் ஆண்டு முதல் தொடர் ஆன்மீகச்சொற்பொழிவுகளை நிகழ்த்திவரும் இலங்கை சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் சுவாமி ரமண சைதன்யா முதல் முறையாக யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் தொடர் ஆன்மீகச்சொற்பொழிவுகளை திங்கட்கிழமை முதல் ஆரம்பித்துள்ளார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அருளாசியுடன் ஆதீன மண்டபத்தில் நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

சுவாமி சைதன்யா பஜனையுடன் தனது நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார். ஆதிசங்கரர், சிவபெருமானை நோக்கி மனமுருகிவேண்டிக் கொண்ட பன்னிரண்டு சமஸ்கிருத சுலோகங்களைக் கொண்ட நூலை அடிப்படையாகவைத்தே இந்தச் சொற்பொழிவு நடத்தப்பட்டு வருகிறது. மன்னிப்பாயாக என்பதே அந்த நூலின பெயராகும்.

முதல் மூன்று சுலோகங்களையும சுவாமிகள் மிகவும் அற்புதமாகத் தித்திக்கும் தமிழிலே விளக்கினார்.

இன்றைய உலகத்திலே நல்ல விஷயங்களுக்கு நேரமில்லை என்பது கவலைக்கிடமாகிறது. செய்ய வேண்டிய காரியங்களைச்செய்யாமலும், செய்யக்கூடாத காரியங்களைச் செய்தும் பாவங்களை நாம் சேர்த்துக்கொள்கின்றோம். வாழ்நாள் முழுவதுமே இறைவனை நினைக்காத பாவகாரியங்களை மனிதன் செய்கிறான். உண்மையான அன்புடன் பயபக்தியுடன் நான் இறைவனை நினைக்க

வில்லையே என்று சங்கராச்சாரியார் வருந்துகின்றார். என்னுடைய தாயின் கருவறையில் இருக்கும் போது என்னை நினைக்க சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. தாயினுடைய கர்ப்பப்பையிலே மலமூத்திரங்களோடு மிதந்து ஜடவாக்கினியால் வெந்து கொண்டிருந்தேன். அந்த தொல்லைகளை வாயால் சொல்லவேமுடியாது. அது அனந்தமான அனுபவம் இல்லை. அவளது வயிறு இருட்டறை, அங்கே உன்னை நினைக்க எங்கே நேரம்? கடவுளே! வேண்டாம் இந்த ஜீவன் நரகவேதனை - என்று சுவாமிகள் விளக்கியபோது சபையே அவரோடு சேர்ந்து துன்புற்றது.

நல்ல பிறப்பை உணராமல் உலலுகிறோம்

வழிபாடு, தியானம் செய்து சாகரத்திலிருந்து விடுபடமுயற்சிக்க வேண்டும். உலக வாழ்க்கை உண்மையில் துக்கத்தின் இருப்பிடம். கடவுளே! நல்ல பிறப்பை எமக்கு எதற்காகக் கொடுத்தாய்? அதை உணராமல் நாம் அறியாமையில் உழலுகிறோம். அழகிய உலகத்தை இறைவன் படைத்துள்ளான். நீர்,காற்று, உணவு, உடை, உறையுள் எல்லாமே அவனது கொடைதான். அவனால்தான் எமது மோட்சம் பெறப்படும். இதைத் தெரியாமல் பிள்ளைப் பருவத்தில் ஆண்டவனை நான் நினைக்கவில்லை. ஆனால் இளமைப் பருவத்தில் என்ன செய்தேன்?

ஐந்து தலை நாகத்தால் தீண்டப் பெற்றேன். இன்பப்பொருள்களின்பால் கவனம் சிதறியது என்றும் ஆதிசங்கரர் வருந்துகின்றார். புலன் இன்பங்கள் மிகவும் பயங்கரமானவை. விவேக சூடாமணியின்படி தீண்டாமலே விடம் தருபவை அவை. யயாதியின் காம வாழ்வை நாம் கவனிக்கவேண்டும். அவள் ஈற்றில்பெற்றபடிப்பினை அற்புதமானது; காமம் மோசமானது; வெல்ல முடியாதது. நெருப்பிலே நெய் ஊற்றுவதுபோல் காமம் உள்ளது.

இன்று எம்மிடையே நடப்பவை மிக மோசமானவை. சினிமா மோகம் எம்மைப்பிடித்தாட்டுகின்றது. மோசமான சினிமாப் பாடல்களைக் கேட்கவே நாரசமாக உள்ளது. வெளியே பயங்கரமான தூண்டுதல். இதனால் இன்றைய இளைஞர்கள் செய்யக்கூடாத வற்றை எல்லாம் செய்கிறார்கள். உதாரணமாகப் பகிடிவதையை எடுத்துக்காட்டலாம். மனதிலே கர்வமும் அகங்காரமும் நிறைந்துள்ளதே அவற்றுக்குக் காரணம். நாம் இளைஞர்களைக் குறை சொல்வதில் பயனில்லை. மாற்று வழியைநாம் காண்பிக்கின்றோமா? எங்கிருந்து எப்படி யார் ஆரம்பிப்பது? - என்று சுவாமிகள் கேட்டபோது சபை மௌனமானது. சுவாமிகளின் தொடர் சொற்பொழிவு வியாழக்கிழமை வரை நடைபெறும். தினமும் மாலை ஆறு மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் சொற்பொழிவு ஆரம்பமாகிறது.

(தொகுப்பு: சுடர் மகேந்திரன்)

ஈராக்கிலிருந்து ஸ்பெயின் படையினர் வாபஸ் பெறப்படுவதற்கு புஷ் கண்டனம்

அந்நாட்டுப் பிரதமருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு விசனம் தெரிவித்தார்

வாஷிங்ரன்,ஏப்.21

ஈராக்கிலிருந்து ஸ்பெயின் படையினரை அந்நாட்டுப் பிரதமர் திரும்ப அழைத்துள்ளமையை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் வில்லியம் புஷ் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது ஈராக்கிலிருந்து தமது படையினர் வாபஸ் பெறப்படுவர் என்று ரொட்றிக் ஸப்பட்டரோ உறுதியளித்திருந்தார்.

தேர்தலுக்கு முன்னர் தலைநகர் மடறிட்டில் இடம்பெற்ற பெரும் தாக்குதலையடுத்து அவர் இந்த உறுதி மொழியை வழங்கியிருந்தார். அதன்படி ஈராக்கிலிருந்து ஸ்பானியப்படையினரை திரும்பப் பெற அவர் உத்தரவிட்டடுள்ளார்.

ஸபெயின் பிரதமரின் இந்தமுடிவு குறித்து அமெரிக்க அதிபர் தனது கண்டனத்தைக் கடும் தொனியில் வெளியிட்டுள்ளார். தொலைபேசியில் ரொட்றிக் ஸப்பட்டரோவைத் தொடர்பு கொண்டு அவரது முடிவு குறித்த தனது விசனத்தையும் புஷ் தெரிவித்தார். 5 நிமிடங்கள் இந்த உரையாடல் நீடித்தது. தீவிரவாதிகளுக்குச் சார்பான அவர்களுக்கு ஆறுதலளிக்கக்கூடிய விடயங்களைக் கூட்டாளி நாடுகள் எவையும் செய்யக்கூடாது என்றும் புஷ் எச்சரிக்கை செய்துள்ளார்.

கொண்டூரஸ் படையினரும் வாபஸ்

அதேநேரம் கொண்டூரஸ் நாடும் ஈராக்கில் உள்ள தனது படையினரைத் திரும்ப அழைக்கவுள்ளது. எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாகத் தமது துருப்பினரைத் திரும்ப அழைத்துக் கொள்ளப்போவதாக அந்த நாட்டுப் பிரதமர் ரிக்கார்டோ மடூரோ தெரிவித்துள்ளார்.

கொண்டூரஸைச் சேர்ந்த 370 படையினர் ஈராக்கில் பணியாற்றி வருகின்றனர். முன்னதாக கொண்டூரஸ் விடுத்த அறிக்கையில் எதிர்வரும் ஜூலை மாதம் தமது துருப்புக்கள் மீளப்பெறப்படும் என்று அறிவித்திருந்தது.

தனது படையினரைத் திரும்பப் பெறுவது குறித்து ஈராக்கில் படையினரை நிறுத்தி இருக்கும் கூட்டாளி நாடுகளின் தலைவர்களுனும் அமைட நாட்டுத் தலைவர்களுடனும் பேசியுள்ளார். என்றும் பிரதமர் மடூரோ கூறினார்.

இதற்கிடையில் -

ஸ்பெயின் தனது படையினரைத் திரும்பப் பெறுவது கூட்டு நாடுகளின் நடத்தைக்கு முரணானது என்றும் அது ஈராக்கில் உள்ள ஏனைய கூட்டுப் படையினரை அச்சுறுத்துவதாக அமையும் என்றும் புஷ் கூறியுள்ளார் என வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஸ்கொட் மக்கெலன் தெரிவித்துள்ளார். (ஐ-க)

அகதிமுகாம்களை மூடிவிட ஐ.நா. முடிவு

ஆப்கான் எல்லையோரம் பாகிஸ்தானில் அமைக்கப்பட்ட அகதிமுகாம்கள் அனைத்தும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் மூடப்பட்டுவிடும் என்று அகதிகளுக்கான ஐ.நா.தூதுவர் ரூட்லெப்பர்ஸ் தெரிவித்துள்ளார்.

மூடப்படவுள்ள முகாம்கள் அல் கெய்டா, தலிபான் படையினர் தீவிரமாக இயங்கிவரும் பகுதிகளுக்கு வெகு அருகிலிருக்கின்றன என்று அவர் கூறினார்.

எல்லையோரம் 15 முகாம்கள் தற்போது உள்ளன. இவற்றில் 2லட்சம் ஆப்கான் அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். முகாம்களுக்கு அருகிலுள்ள பிரதேசங்களில் தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை அமெரிக்க மற்றும் பாகிஸ்தான் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கப் படையினர் குண்டு மாரி பொழிந்தபோது அங்கிருந்து வெளியேறிய அகதிகளே பாகிஸ்தான் எல்லையோர முகாம்களில் தங்கியுள்ளனர்.

இந்த முகாம்கள் எதிர்காலத்தில் தீவிரவாதிகளின் தளங்களாக மாறிவிடலாம் என்று ஐ.நா.அதிகாரிகள் கருதுகின்றனர். அதனாலேயே விரைவில் அவற்றை மூடிவிட அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

வடக்கு மாநிலங்களில் வன்முறைகளுடன் இந்தியத் தேர்தலில் நேற்று வாக்குப் பதிவு

புதுடில்லி,ஏப்.21

வடக்கு மாநிலங்களில் வன்முறைகளுடன் இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப் பதிவுகள் நேற்று ஆரம்பமாகின.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் வாக்குப்பதிவு ஆரம்பித்த சில நிமிடங்களில் முதல் வன்முறை இடம்பெற்றது. வாக்களிப்பு நிலையத்துக்குப் பாதுகாப்பளித்து நின்ற சிப்பாய் ஒருவர் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வேறு சில தாக்குதல்களில் தேர்தல் பணியாளர்கள், வாக்காளர்கள், பொலீஸார் ஆகியோர் காயமடைந்தனர்.

இந்திய நாடாளுமன்றத்துக்கான முதல்கட்ட வாக்களிப்பு 13மாநிலங்களிலும் மூன்று யூனியன் பிரதேசங்களிலும் நேற்றுக் காலையே ஆரம்பமானது.

வடக்கு மாநிலம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாக்களிப்பு அமைதியாக இடம்பெற்றது என அதிகாரிகள் நேற்றுப் பகல் கூறினர்.

ஜம்மு - காஷ்மீரில் பாண்டிப்பூரி என்ற இடத்தில் வாக்களிப்பு நிலையத்துக்கு வெளியே இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 6 பொதுமக்கள் காயமடைந்தனர்.

தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோரும் இஸ்லாமியத் தீவிரவாதிகள் மக்களை மிரட்டுவதற்காக இந்தத் தாக்குதல்களை நடத்தியிருக்கலாம் என்று பொலீஸார் கூறினர்.

பீஹார் மாநிலத்தில் இருகட்சி ஆதரவாளர்கள் இடையில் ஏற்பட்ட மோதலில் குறைந்தது நால்வர் பலியாகினர். வேறு சில இடங்களிலும் வன்முறைகள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குத் தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் மக்கள் காலையிலிருந்தே உற்சாகமாக வாக்களிப்பில் கலந்து கொண்டனர். பொதுவாகவே இந்திய தேர்தலில் 60 வீதத்துக்கு மேலான மக்கள் வாக்களிப்பில் கலந்துகொள்வது வழமை.

தேர்தல் முடிவுகள் மே மாதம் 13ஆம் திகதியே அறிவிக்கப்படும். (ஐ)

வாக்களிப்பதற்காக வரிசையில் காத்து நிற்கும் இந்தியர்கள்.

இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தில் மின் அனு வாக்குப்பதிவு இயந்திரம் யானை மீது ஏற்றி வாக்களிப்பு நிலையம் ஒன்றுக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

தீவிரவாதச் சந்தேக நபர்கள் 10 பேர் பிரிட்டனில் கைது

லண்டன்,ஏப்.21

வடக்கு மற்றும் மத்திய இங்கிலாந்தில் தேடுதல்களை நடத்திய பிரிட்டிஷ் பொலீஸார் தீவிரவாத சந்தேகநபர்கள் 10 பேரைக் கைதுசெய்துள்ளனர்.

மன்செஸ்டர் பகுதியில் ஒரு பெண் உட்பட 7 பேர் கைதாகினர். வேறு மூன்று இடங்களில் இருந்து தலா ஒவ்வொருவர் கைதுசெய்யப்பட்டனர்.

கைதானவர்கள் வட ஆபிரிக்கா மற்றும் ஈராக்கிய குர்திஷ்கள் என்று கூறப்படுகின்றது. இவர்கள் அனைவரும் தீவிரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தொடர் தேடுதல்களில் 400 பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டனர். தீவிரவாதத்துக்கு எதிரான இந்த நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது.

தவிரவாதத் தாக்குதலுக்குத் திட்டமிடப்படுகின்றது என்று கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இந்தத் தொடர் தேடுதலைப் பொலீஸார் மேற்கொண்டனர்.

(ஐ)

செட்னா கிரகத்தைச் சுற்றிவரும் துணைக்கோளும் கண்டுபிடிப்பு

வாஷிங்ரன்,ஏப்.21

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட செட்னா கிரகத்திற்குத் துணைக்கோள் ஒன்று இருப்பது தற்போது அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

அமெரிக்க விஞ்ஞானிகள் புதுப் புதுக்கோள்களையும் விண்வெளியின் அரிய காட்சிகளையும் விளங்குவதில் வல்லவர்கள். இவர்கள் தினம்தினம் புதுப்புதுத் தகவல்களை உலகுக்கு அறிவித்தபடி உள்ளனர். தற்போது அமெரிக்க விண்வெளி அமைப்பாள 'நாஸா'வின் விஞ்ஞானி கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு புளூட்டோ கிரகத்திற்கு அப்பால் உள்ள செட்னா என்ற கிரகத்தைக் கண்டுபிடித்து உலகுக்கு அறிவித்தார்.

இந்தக் கிரகம் புளூட்டோ கிரகத்தின் முக்கால் பங்கு பிரமன் உடையது. இந்தக் கோளைக் கண்டுபிடித்ததைத் தொடர்ந்து விஞ்ஞானிகள் இந்தக் கோளைப் பற்றிய புள்ளி விவரங்களைத் தொலைநோக்கிகள் மூலம் ஆய்வுசெய்து சேகரிக்க ஆரம்பித்தனர்.

இந்த ஆய்வின் முடிவில் செட்னா கிரகத்தை இன்னொரு துணைக் கோள் சுற்றுவதைக் கண்டுபிடித்துள்ளனர். இந்தத் துணைக்கோள் செட்னா கிரகத்தைவிட 25 மடங்கு சிறியது என்றும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மேலும் பல அரிய தகவல்களை அவர்கள் விரைவில் உலகுக்குத் தெரிவிக்கவுள்ளனர் என்று கூறப்படுகிறது. (ஐ-க)

அதிபர் புஷ்ஷுடனான சந்திப்பை பிற்போட்டார் மன்னர் அப்துல்லா

நியூயோர்க்,ஏப்.21

அமெரிக்க அதிபர் வில்லியம் புஷ் ஷுடனான இன்றைய சந்திப்பை ஜோர்தானிய மன்னர் அப்துல்லா பிற்போட்டுள்ளார். இஸ்ரேலின் நடவடிக்கைகள் தொடர்பாக அமெரிக்கா பின்பற்றும் கொள்கை குறித்த அதிருப்தியே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இனங்காணப்பட்ட நபர்களைத் தேடிக் கண்டுபிடித்து அழிக்கும் இஸ்ரேலின் நடவடிக்கைக்கு ஐ.நா.பாதுகாப்புச் சபையில் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று அரபு உலகம் கோருகின்றது.

ஹமாஸ் இயக்கத் தலைவர் சில நாளகளுக்கு முன்னர் இஸ்ரேலினால் கொல்லப்பட்டதை அடுத்து இந்தக் கோரிக்கை வலுத்துவருகின்றது. ஆனால், ஹமாஸ் தலைவரை இஸ்ரேல் கொன்றது சரிதான் என்று அமெரிக்கா வக்காளத்து வாங்கியுள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை அரபுநாடுகளைச் சீற்றமடைய வைத்துள்ளது. இதன் ஒரு வெளிப்பாடே அதிபர் புஷ்ஷைச் சந்திக்கும் நிகழ்சியை ஜோர்தான் மன்னர் பிற்போட்டுள்ளமை என்று கூறப்படுகின்றது.

அமெரிக்காவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜோர்தான் மன்னர் அப்துல்லா இன்று அதிபர் புஷ்ஷை சந்தித்துப் பேசுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மத்திய கிழக்கு அமைதி முயறசி தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாட்டைத் தெளிவாக்கிக்கொள்வதற்குத் தமக்கு கால அவகாசம் தேவை என்று ஜோர்தான் அறிவித்துள்ளது.

ஜோர்தானின் இந்த நகர்வு இராஜீய ரீதியான ஒரு நடவடிக்கை என்று பி.பி.ஸியின் அமெரிக்கச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

புதிய தலைவரை இரகசியமாக நியமித்தது ஹமாஸ் இயக்கம்

ஜெருசலேம்,ஏப்.21

ஹமாஸ் இயக்கத் தலைவர் அப்துல் அஸீஸ் அல் ரந்திஸி இஸ்ரேலிய ஹெலித் தாக்குதலில் உயிரிழந்ததைத் தொடர்ந்து அந்த அமைப்புக்குப் புதிய தலைவர் இரகசியமாக நியமிக்கப்பட்டுள்ளார். தமது தலைவர் படுகொலைக்குப் பழிக்குப் பழி வாங்கவும் அந்த அமைப்பு உறுதி பூண்டுள்ளது.

காஸாவில் இருந்து தனது பிரஜைகளை வெளியேற்றுவது என்று முடிவெடுத்ததையடுத்து ஹமாஸ் தலைவரைப் படுகொலை செய்தது இஸ்ரேல். கொல்லப்பட்ட தலைவருக்குப் பதிலாகப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைவர் தொடர்பான விவரங்களை ஹமாஸ் வெளியிடவில்லை.

ஆனால், இஸ்மாயில் ஹனிபா அல்லது முஹமட் அல்- ஷாகர் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கலாம் என்று செய்திகள் கூறுகின்றன.

வீண் ஆராய்ச்சி நிலையத்தை நோக்கி

முன்று விண்வெளி வீரர்களுடன் ரஷ்ய ரொக்கெட் புறப்பட்டது

பைகானூர்,ஏப்.21

விண்வெளியில் 16நாடுகள் சேர்ந்து உருவாக்கிய சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் தங்கி ஆராய்ச்சி நடத்துவதற்காக 3 விண்வெளி வீரர்களுடன் ரஷ்ய ரொக்கெட் 'சோயுஸ் டி.எம்.ஏ-4' விண்வெளி செலுத்தப்பட்டது.

இதில் ரஷ்ய விண்வெளி வீரர் கென்டி படால்கா, அமெரிக்க பறப்புப் பொறியியலாளர் மைக்கேல் பிங்கே ஆகியோரோடு ஐரோப்பிய விண்வெளி அமைப்பு சார்பில் ஆன்ட்ரே குய்ப்பர்ஸ் என்ற நெதர்லாந்து நாட்டுக்காரரும் செல்கிறார்.

அமெரிக்க ரஷ்ய வீரர்கள் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் 6 மாதம் தங்கி ஆராய்ச்சி செய்வார்கள. ஆன்ட்ரோ 11 நாள்கள் மட்டுமே தங்குவார். அதன் பிறகு ஏற்கனவே அங்கு தங்கி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த அமெரிக்கர் மைக்கேல் போயல், ரஷ்யர் அலெக்சாண்டர் களேரி ஆகியோரை ஏற்றிக்கொண்டு ரொக்கெட் பூமிக்குத் திரும்பும்போது நெதர்லாந்து விண்வெளி வீரரும் திரும்புவார்.

கஜகிஸ்தான் நாட்டில் உள்ள பைகானூர் விண்வெளி நிலைபத்தில் இருந்து ரொக்கெட் சீறிப் பாய்ந்து விண்ணில் நுழைந்து பூமியின் வட்டப்பாதையில் சுற்றிவருகிறது.(ஐ-க)

SRI LANKA RED CROSS SOCIETY

Health and Psychosocial Programme - Jaffna District

VACANCIES

Sri Lanka Red Cross Society seeking applications for employment of following positions for the implementation of a Health and Psychosocial programme in Jaffna District commencing from May 2004.

a. Project Coordinator (1)
b. Field Assistant (2)
c. Secretary (1)
d. Financial Assistant (1)
e. Logistician (1)
f. Drivers (2)

Interested persons can obtain the details of job descriptions from

Sri Lanka Red Cross Society
Jaffna Branch
73, Kandy Rd. Jaffna.

Application for the post with complete bio-data should be sent to,

Sri Lanka Red Cross Society,
Jaffna Branch,
73, Kandy Rd. Jaffna.

Under registered cover on or before 3rd of May 2004. Only short listed candidates will be called for interview.

Director General
c/o Chairman,
Sri Lanka Red Cross Society,
Jaffna District.

(31087)(21-12-1)

பாம்பினால் கடியுண்டார்

தென்மராட்சி,ஏப்.21

உளுந்துச் செடிக்குக் கிருமி நாசினி விசிறியவர் பாம்பினால் கடியுண்டார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கல்வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த நல்லதம்பி சிவகுலநாதன் (வயது 43) என்பவரே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-117)

அடிக்கல் நாட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.21

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகக் கட்டட அடிக்கல் நாட்டும் விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

கரவெட்டிப் பிரதேச செயலக கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் செ.பதமநாதன் கலந்துகொள்வார். (-8-ரி)

லொறிச் சாரதிக்கு விளக்கமறியல்

தென்மராட்சி,ஏப்.21

மாதுவில் தெற்கு, கல்வம் சிவன கோயிலடியில் கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற லொறி - சைக்கிள் விபத்தில் ஒருவர் மரணமானதையடுத்து லொறியின் சாரதியை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸார் லொறிச் சாரதியான சண்டிலிப்பாய் மாகியப்பிட்டியைச் சேர்ந்த தியாகராசா ஹரிகரன் என்பவரை நீதிமன்றில் ஆஜர் செய்தபோது இந்நபரை எதிர்வரும் மே மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-8-117)

காணி தேவை

முறிகண்டிக்கும் பரந்தனுக்கும் இடையில் யாழ். வீதியிலிருந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் 2 முதல் 4 ஏக்கர் வரையான காணி தேவை. கைத்தொழில் நிலையம் ஒன்றை நிறுவக்கூடிய புற வசதிகள் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

விற்பனைக்குள்ள காணி குறித்த உரிமை மற்றும் முழுமையான விவரங்களுடன் எழுத்துமூலம் மட்டும் 30.04.2004 இற்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.

நிர்வாக இயக்குநர்,
உதயன் பப்ளிகேஷன்ஸ்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/34538)(22-19-12)

நலம்பெறப் பிரார்த்திக்கின்றோம்

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் முன்னாள் அமைச்சராக இருந்து மக்களுக்கு அரிய தொண்டாற்றிய

திரு.தியாகராஜா மகேஸ்வரன்

அவர்கள் கடந்த 27.03.2004இல் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த செய்திகேட்டு மிகவும் துயராடைகிறோம். இவர் மிகவிரைவில் நலமடைந்து மீண்டும் தமிழ்மக்களுக்கு அளப்பரிய சேவையாற்ற எல்லாம் வல்ல விநாயகர் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர், யாழ்ப்பாணம். (31072) (26-21-19-12)

யா/நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயத்தினரும், அடியவர்களும்.

இலங்கைச் சட்டக் கல்லூரி விண்ணப்பங்களைக் கோரியுள்ளது

கல் வியாண்டு 2005இற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக இலங்கைச் சட்டக் கல்லூரி விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இம்மாதம் 19ஆம் திகதி முதல் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 31-05-2004.

விண்ணப்பப்படிவத்தையும் கடந்தகால வினாப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்வதற்கு, Incorporated Council of Legal Education பெயரில் Hatton National Bank இன Hulftsdorp கிளையில் 01-18041-01-1 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படக்கூடியதாக எந்தவொரு HNB கிளையிலும் ரூபா 450/=செலுத்தி மூலப் பற்றுச்சீட்டினை சட்டக் கல்லூரி அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும். வங்கிப் பற்றுச்சீட்டில் தங்களது பெயரை முதலெழுத்துக்களுடனும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் குறிப்பிடவும்.

விண்ணப்பப்படிவங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் வங்கி பற்றுச்சீட்டையும் சுயவிலாசமிடப்பட்ட 15"X10" அளவிலான தபால உறையுடன் தபால் செலவுக்கான ரூபா 84/- பெறுமதியான முத்திரையையும் அனுப்புதல் வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி
The Principal,
Sri Lanka Law College,
244, Hulftsdorp Street, Colombo 12.

குறிப்பு: ☆ கல்வித்தகைமை மற்றும் நுழைவுப் பரீட்சை தொடர்பான விவரங்களுக்கு 08-04-2004 அன்று வெளியான "உதயன்" பத்திரிகையைப் பார்க்கவும்.

☆ மேற்படி நுழைவுப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து தோற்றவுள்ள மாணவர்களுக்காக இலங்கைச் சட்டக் கல்லூரி - சட்ட மாணவர் இந்து மகாசபை ஏற்பாடு செய்துள்ள மே மாதத்திற்கான வகுப்புகள் மே 4ஆம், 5ஆம் திகதிகளில் காலை 9.30முதல் மாலை 4.30வரை யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும்.

சட்ட மாணவர் இந்து மகாசபை,
இலங்கைச் சட்டக்கல்லூரி.

விளம்பர அனுசரணை:

குமரன் புத்தக இல்லம்,
201, டாம் வீதி,
கொழும்பு - 12.
(C/34560)

N.பாஸ்கரன்,
நெல்லியடி,கரவெட்டி,
J-1/10, Anderson Flats,
Colombo 05

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் செயலாளரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் 2004-05-10ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) நரம் எம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையைச் செலுத்தி கேள்வி பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப் பத்திரத்தில் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து *செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி* என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இட்டு, இரண்டாம் பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்* அவர்களுக்கு அனுப்பி வைக்கவேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 2004-05-12 முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கச் செய்தல் ஒப்பந்தகாரரின் கடமையாகும்.
03. கேள்விகள் 2004.05.12 நண்பகல் 12.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
04. மேலதிக விவரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

தொ. இல.	வேலை	மீளளிக்கப்படும் கேள்விப் வைப்பு பணம் (ரூபா)	மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் (ரூபா)	மீளளிக்கப்படாத பெறுமதி சேர் வரி (ரூபா)
01.	சக்களாவத்தை வீதி	1000.00	500.00	75.00
02.	தெக்கிரி வீதி	2000.00	500.00	75.00
03.	கொல்லர் வீதி	3000.00	500.00	75.00
04.	எள்ளங்குளம் மயான வீதி	1000.00	500.00	75.00
05.	கடுக்காய் பாடசாலை வீதி	1000.00	500.00	75.00
06.	குலணைப் பிள்ளையார் குறுக்கு வீதி	1000.00	500.00	75.00
07.	பளவத்தை வீதி	1000.00	500.00	75.00
08.	மத்தொணி வெல்லன் வீதி	1000.00	500.00	75.00
09.	வேரெண்டை கொல்களம் புனரமைத்தல்	1000.00	500.00	75.00
10.	நெல்லியடி மீன்சந்தை கட்டடம் - மிகுதிவேலை	2000.00	500.00	75.00

சிதம்பரப்பிள்ளை - பசுபதி
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

19-04-2004

(சி-34559)(21-12-19) (21-19-12)

மரண அறிவித்தல்

செபமாலை சூசைப்பிள்ளை

(பிரபல புடைவை வியாபாரி)

பலாலியைப் பிறப்பிடமாகவும் (புனித செபஸ்தியார் ஆலயம்) சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை சூசைப்பிள்ளை 19.04.2004 அன்று காலமானார்.

அன்னார் பிறிஜிற்றம்மாவின் பாசமிகு கணவரும் ஜேற்றூட்டின் அன்புச் சகோதரனும் அன்ரனிதாஸ் (மகான்- புடைவை வர்த்தகர் சுன்னாகம்), ஞானரத்தினம் (ஜோசப் புடைவை வர்த்தகர் சுன்னாகம்), மேரி கெலன் (ஆசிரியை யாழ்/ மயிலணி மகா வித்தியாலயம்), ஞானபுஸ்பம், இருதயநாதன் (ஆசிரியர்- யா/புனித கென்றி அரசர் கல்லூரி, இளவாலை), யஸ்தஸ் சின்னப்பு (புடைவை வர்த்தகர் சுன்னாகம்), டேவிற் பேடினன் (புடைவை வர்த்தகர் சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மாக கிறட்றாணி, மாசில்மனோகரி, எஸ்.கே. மரியதாஸ் (பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ்.பல்கலைக்கழகம்), பரமநாயகம் (புடைவை வர்த்தகர் சுன்னாகம்), மிரியம் கொன்சற்றா (ஆசிரியை றோ.க.த.க. பாடசாலை), சகாயநாயகி மரினா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோஜன் (குருமட மாணவன் அ.ம.தி), கலஸ்ரீன் பஸில்டா, கிறேசியன், அனோஜ், பிறிஜிற், லெனோஜினி, கிறிஷாந்த், றொசிற்றா, வீனஸ், லிபிந்தா, லைனஸ், பவுலினா, ஆன்றா அனிஸ், பயஸ், நலக்ஷியா, மேவின், அன்ரனி ஆகியோரின் அன்புப் பேரனும் பார்பருஸ்பமலர், அலோசியஸ், செலின் ஆகியோரின் தாய்மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.04.2004) புதன்கிழமை காலை 10 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத் திருப்பலியின் பின், புனித அந்தோனியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

அந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம். (31093) (40-21-19-18)

தகவல்
மனைவி, பிள்ளைகள்.

உதயன்

சபாநாயகர் தெரிவில் அரசின் எதிர்காலம்

பதின்மூன்றாவது நாடாளுமன்றம் நாளை கூடுகின்றது.

இந்த நாடாளுமன்றத்தின் செயற்பாடு - போக்கு - எப்படி அமையப் போகின்றது என்பதற்குக் கட்டியம் கூறுவது போல நாளைய முதல்நாள் அமர்வு 'வெகு சூடாக' இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாளை முதல் அமர்வில் முக்கிய விடயமாக இடம் பெறப்போவது சபாநாயகர் தெரிவு.

அரசமைப்பின் 17ஆவது திருத்தத்துக்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ள அரசமைப்பு கவுன்ஸிலின் செயற்பாட்டில் - பங்குபணியில் - சபாநாயகரின் பங்களிப்பு அதிகம்.

அதுவும் இந்த அரசமைப்புக் கவுன்ஸிலின் கீழ் செயற்படவேண்டிய சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழு இன்னும் செயற்படவில்லை. அது செயற்படுவதற்கு ஜனாதிபதி ஒத்துழைப்பு வழங்கவில்லை. தமது ஆளை சபாநாயகராக வைத்துக்கொண்டு உத்தேசத் தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர்களை மாற்றியமைத்து, அதனடிப்படையில் அதைச் செயற்பட அனுமதிக்கலாம் என ஜனாதிபதி திட்டமிட்டிருக்கும் சூழ்நிலையில், சபாநாயகர் பதவியில் யார் அமர்வது என்பது ஜனாதிபதிக்கும் மிக முக்கியமான விடயமாகின்றது.

அத்தோடு, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிராத அரசுக்கு - அதன் உயிர் வாழ்வுக்கு - சபாநாயகர் பதவி மிகமுக்கியமானது. அப்பதவி எதிரணித் தரப்பின் கைகளுக்குப் போனால் ஒரு சிறுபான்மை அரசுக்கு அது நித்திய தலையிடியாக மாறிவிடும். எனவே, அதைக் கைப்பற்றுவதில் அரசுத் தரப்பு மும்முரமாக இருக்கின்றது.

அதேபோன்று, எதிரணியினருக்கும் அரசத் தரப்பை உலுப்புவதற்கு இந்தப் பதவி அவசியமாகின்றது. தமது அரசை இடையில் கலைத்து வீட்டுக்கு அனுப்பிவிட்டு, இந்த அரசை நிலைநிறுத்தியிருக்கிறார் ஜனாதிபதி என்பதால் பிரதான எதிரணியான ஐ.தே.முன்னணிக்குக் கோபம். அந்த எரிச்சலைக் கொட்டித் தீர்க்க சபாநாயகர் பதவி அவசியம் என அது கருதுகின்றது.

சபாநாயகர் பதவிக்கு ஒருபுறம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் டியூ குணசேகர. மறுபுறம் ஐ.தே. முன்னணி வேட்பாளர் லொக்குபண்டார.

ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட ஜாதிக ஹெல உறுமய இதுவரை வெளிப்படுத்தி வந்த தனது கருத்துப்படி சபாநாயகர் தேர்வில் நடுநிலை வகிக்குமாயின் ஆளும்கட்சி வேட்பாளர் நிலை அதோகதி தான்.

இரகசியமான - 'குடவோலை' முறை போன்ற - வாக்களிப்பு என்பதால் அரசுத் தரப்பிலிருந்து பலர் மாறி தமக்கு வாக்களிப்பார்கள் என ஐ.தே.மு. வேட்பாளர் லொக்கு பண்டார நம்புகின்றார்.

இதற்கிடையில் -

ஆளும் கட்சிக் கூட்டணியில் ஸ்ரீல.சு கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான முறுகல் இன்னும் தீரவில்லை.

கடந்த ஆட்சிக்காலத்தில் அரசுத் தரப்பிலிருந்த சில அமைச்சுக்களை ஜனாதிபதி பிடுங்கி - பறித்து - எடுத்தார். அதை அப்போதைய ஆளும் ஐ.தே.மு. ஆட்சேபித்தது. ஆனால், அப்படி மாற்றும் உரிமை அரசமைப்பு ரீதியாக ஜனாதிபதிக்கு உள்ளது. அதில் யாரும் தலையிட முடியாது என்று அப்போது அடித்துக் கூறியது ஜே.வி.பி.

இப்போது, ஸ்ரீல.சு.கவுடன் ஜே.வி.பி செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி புதிய அரசில் தங்களுக்குத் தரவேண்டிய அமைச்சுக்களை ஜனாதிபதி தராமல் பிடுங்கிவிட்டார் என்பதில் ஜே.வி.பிக்கு ஆதங்கம்; எரிச்சல். ஆனால், அதை எப்படி வெளியே சொல்வது என்பதுதான் அவர்களுக்கு உள்ள சிக்கல்.

அமைச்சர்களை நியமிப்பதும் அமைச்சுக்களை ஒதுக்குவதும் அரசமைப்பு ரீதியாக ஜனாதிபதிக்கு உள்ள தனியுரிமை என்று ஜே.வி.பிதான் முன்னர் கூறியது.

ஸ்ரீல.சு.க. - ஜே.வி.பி. ஒப்பந்தம் காரணமாக அந்த அரசமைப்பு அதிகாரம் ஜனாதிபதியிடமிருந்து நீங்கிவிட்டதாக அவர்கள் கூறமுடியாது. எனவே, என்ன செய்வது என்று தெரியாமல் ஜே.வி.பியினர் திண்டாடுகின்றனர்.

ஸ்ரீல.சு.க. - ஜே.வி.பி. இடையேயான பிணக்குத் தீர்க்கப்பட்டாலும் இப்போதைக்கு அரசின் காலை வாரும் எண்ணம் ஜே.வி.பிக்கு இல்லை என்று கூறப்படுகின்றது.

இந்தப் பின்னணியில்தான் சபாநாயகர் தெரிவு நாளை நடக்கின்றது.

ஸ்ரீல.சு.க. தரப்பு மீதுள்ள எரிச்சலை சபாநாயகர் தெரிவிலும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் காட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனவே, நாளை சபாநாயகர் தெரிவின் போக்கை வைத்து இந்த நாடாளுமன்றத்தின் செயற்பாடு எப்படி அமையப்போகின்றது என்பதை ஓரளவு ஊகித்து விடமுடியும்.

வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்தோருக்கான திட்டங்களை அமுல்செய்ய அதிகார சபை

அமைக்கப்பட வேண்டும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஏப்.21

வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்தவர்கள் சார்பாக மத்திய அதிகாரசபை ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

போர் அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்திப் புனர்வாழ்வுத் திட்டங்களை அமுல் செய்யக்கூடிய அதிகாரங்களைக் கொண்டதாகவும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஒருங்கிணைக்கக் கூடிய வகையிலும் அது அமைந்திருக்க வேண்டுமென ஜனாதிபதி கருதுவதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு தொடர்பான அமைச்சு, ஜனாதிபதியின் பொறுப்பில் செயற்படும். ஒருசில வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்த்துகை செயற்றிட்டமும் விஸ்தரிக்கப்படும். அனுபவமும் தகுதியும் வாய்ந்த அதிகாரிகளை நியமித்து அதனை செயல் திறன் வாய்ந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல இருப்பதாகவும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் சமீபத்தில் நடந்த அனர்த்தங்களில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நடத்தப்பட்ட மாநாட்டில், வடக்கு - கிழக்கில் சொந்த இடங்களைவிட்டு வெளியேறியோரை மீளக்குடியமர்த்துவதில் உள்ள சிக்கல் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை, ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், 'யுனிசெவ்' அமைப்பு, அகதிகளுக்கான ஐ.நா.உயர் ஸ்தானிகராலயம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தப் பிரச்சினைகளை ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினார்கள்.

இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைகளின் தளபதிகள், பொலீஸ்மா அதிபர், அமைச்சர் பேரியல் அஷ்ரப், வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜயவர்த்தனா, கிழக்கு மாகாண அரச அதிபர்கள், ஜனாதிபதி செயலகத்தின் உயர்அதிகாரிகள் போன்றோர் கலந்துகொண்டனர். (ஐ-8-9-12)

அமைச்சர்களை நியமிக்கும் பிரச்சினை முடிவுக்கு வருகிறது என்கிறார் அனுரா

கொழும்பு,ஏப்.21

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அமைச்சர்களை நியமிப்பது தொடர்பான பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என்று அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் நேற்று இடம்பெற்ற மதவழிபாட்டு நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்து வரும் 24மணிநேரத்துக்குள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட கூட்டம் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

சபாநாயகர் தெரிவு தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என்று கூட்டமைப்பின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ-ரி)

மஸ்கெலியா முருகன் ஆலயத்தை பாதுகாக்கக் கோரி ஜனாதிபதிக்கு மகஜர்

மவுசாக்கெல்ல நீர்த்தேக்கத்தில் மூழ்கிப்போயுள்ள மஸ்கெலியா ஸ்ரீசண்முகநாத சுவாமி கோயிலையும் அதன் சுற்றாடலையும் பாதுகாத்து உதவும்படி அகில இலங்கை இந்து காங்கிரஸ் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மஸ்கெலியா ஸ்ரீசண்முகநாத சுவாமி கோயில் இந்தியாவிலிருந்து பாறைக்கருங்கற்கள் கொண்டுவரப்பட்டு 1917ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 1969ஆம் ஆண்டு மவுசாக்கெல்ல நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்டதையடுத்து இக்கோயில் நீரில் மூழ்கியது. 1993, 1994ஆம் ஆண்டுகளில் தேக்கத்தில் நீர் வற்றியபோது சில நாசகார சக்திகள் கோயிலின் பாறைக் கற்களை அப்புறப்படுத்த முயன்றனர். இந்த விடயம் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இப்பொழுது மீண்டும் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் வற்றியுள்ளதால் சில சக்திகள் கோயிலின் வளாகப் பகுதியில் வைரக்கல் தோண்டுவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். இதன்மூலம் கோயிலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படப்போகிறது.

எனவே, இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டுக் கோயிலையும் அதன் சுற்றாடலையும் காப்பாற்றும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

- இவ்வாறு அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் பிரதம மந்திரி, இந்துசமய அமைச்சர் மற்றும் முக்கியஸ்தர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஐ-ப)

விஞ்ஞானச் சங்கத்தின் ஆண்டுவிழா பல்கலைக்கழகத்தில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப் 21

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் 12ஆவது ஆண்டுவிழா நிகழ்வுகள் இன்று புதன்கிழமை காலை 9மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகின்றன.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய கலந்துகொள்வார்.

இன்று புதன்கிழமை முதல் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வரை 9 அமர்வுகளாக இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் மாணவர்களுக்குப் பயன்படக் கூடிய பொதுவிரிவுரைகள், ஆய்வரங்குகள், கருத்தரங்குகள் என்பன இடம்பெறும். ஆய்வரங்கில் 30இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. கருத்தரங்கில் 'இலங்கையில் இரண்டாம், மூன்றாம் நிலைக்கல்வி எதிர்நோக்கும் சவால்கள்' என்னும் தலைப்பில் கருத்துரைகள் இடம்பெறும்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் இறுதிநாள் நிகழ்வில் விஞ்ஞானச் சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி எஸ்.இராசதுரை 'யாழ். குடாநாட்டின் வளமும் விவசாயமும்' என்ற தலைப்பில் கருத்துரையாற்றுவார்.

இந்த நிகழ்வுகளில் ஆர்வமுள்ளோரும் பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்களும் கலந்துகொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-8)

கொரியாவில் இலங்கையருக்கு பல வேலைவாய்ப்புகள்

கொழும்பு,ஏப்.21

புதியதொரு திட்டத்திற்கமைய இலங்கையர்களுக்குத் தென்கொரியாவில் கூடுதலான வேலைவாய்ப்புகள் கிடைக்க உள்ளன. புதிய திட்டத்தின்படி பயிலுநர்களாகவோ, அனுமதி பெற்றவர்களாகவோ இலங்கையர்கள் தென்கொரியா செல்ல முடியும் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தென்கொரியத் தூதுவரைச் சந்தித்த பின்னரே அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முதலீடு செய்ய முன்வருமாறு தமது நாட்டின் கைத்தொழில் அதிபர்களுக்கு ஊக்கமளிக்கப் போவதாகத் தென்கொரிய தூதுவர் டி.கே.கொங் உறுதியளித்துள்ளார். (ஐ-ரி)

நாளை

சித்திரை 10
வியாழக்கிழமை
(22.04.2004)
திதி : திருதியை
இரவு 11.59 வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
பகல் 1.53 வரை.
சுபநேரம்: 7.31 - 9.01
ராகுகாலம்: 1.31 - 3.01
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

மனவலிமை இல்லாதவர்கள் சந்தர்ப்பங்களுக்குக் காத்திருக்கிறார்கள். மனவலிமை உள்ளவர்கள் சந்தர்ப்பங்களை உண்டாக்கிக்கொள்கிறார்கள்.

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் பெறுமதிமிக்க சேவைபுரிந்துள்ளது

தலைவர் பேராசிரியர் குமாரவடிவேல் செய்தி

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்ப்பாணச விஞ்ஞானச் சங்கம் தனது பன்னிரண்டு கால சேவையில் பெறுமதிமிக்க சேவையை ஆற்றியுள்ளதாக அதன் தலைவரும் விஞ்ஞான பீடாதிபதியுமான பேராசிரியர் இ.குமாரவடிவேல் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார். அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் யாழ். குடாநாட்டு மக்களிடையே விஞ்ஞான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. குடாநாட்டில் விஞ்ஞான அறிவைப் பரப்புவதிலும் உயர்தர பாடசாலை மாணவர்களிடையே அறிவியல் வழியிலான சிந்தனையை வளர்ப்பதிலும் பதிய வைப்பதிலும் புலமையாளர்களிடையே ஆராய்ச்சியை ஊக்குவிப்பதிலும் இச்சங்கம் பெறுமதி மிக்க சேவையாற்றியுள்ளது.

இச்சங்கம் சனரஞ்சக விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகள், வருடாந்த விஞ்ஞான அமர்வுகள், பாடசாலை விஞ்ஞான நிகழ்வுகள், புதிர்ப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், கண்காட்சிப் போட்டிகள் மூலமாகவும் அறிவியல் நூல் வெளியீடுகள் மூலமாகவும் தனது குறிக்கோள்களை அடைகிறது.

மூன்றாம் நிலைக் கல்வியில் பல சீர்திருத்தங்கள் புகுத்தப்படுகின்ற இக்காலகட்டத்தில் 2004ஆம் ஆண்டுக்கான சங்க வருடாந்த அமர்வின் விவாதத்துக்குரிய கருப்பொருளாக "மூன்றாம் நிலைக்கல்வி எதிர்நோக்கும் சவால்கள்" என்ற தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை பொருத்தமானதே.

சிறந்த மருத்துவ நிபுணரும் யாழ்ப்பாணத்தில் கல்விப் பாரம்பரியமொன்று உருவாகி வேரூன்றக் காரணமாகவிருந்த குடும்பங்களுளொன்றின் வழிவந்தவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தருமாகிய பேராசிரியர் மயில்வாகனன் சிவசூரிய அவர்கள் இவ்வாண்டு செயலமர்வில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவிருப்பது மிகப் பொருத்தமாக அமைகிறது - என்று உள்ளது. (அ)

பழைய பத்திரிகைகள் விற்பனை

பொதிகள் கட்டுவதற்கு உகந்த பழைய பத்திரிகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.
தொகையாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.
தேவைப்படுவோர் நேரில் வருகைதந்து விவரங்களை அறிந்துகொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
'உதயன்' பணிமனை,
361,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/34548)(16-14-26)

சொற்பொழிவாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.21

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ தினங்களில் தொடர் சொற்பொழிவு வாற்றிய பிரம்மஸ்ரீ சி.வை.நித்தியானந்தசர்மா ஆலய பரிபாலனசபையினரால் அண்மையில் கௌரவிக்கப்பட்டுள்ளார். (10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.21

உடுவில் மல்வம் இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற அலங்கார உற்சவத்தினபோது 'கந்தபுராணம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்றிய சைவப் புலவர் நித்தியதசீதரன் ஆலய நிர்வாகத்தினரால் கடந்த வெள்ளிக்கிழமை 'தமிழ்ச்சுடர்' எனும் பட்டம்வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சமூகஜோதி கணேசதாஸன் இந்தப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். (-8-ரி)

பாதுகாப்பு வலயத்தினுள் முஸ்லிம்களை குடியமர்த்தக் கோரிக்கை

தென்மராட்சி,ஏப்.21

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் அதிஉயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அமைந்துள்ள குடியிருப்புப் பகுதிகளில் முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்வதற்கு வசதியாக அவற்றினை விடுவிக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் 52ஆவது படையணி செயற்பாட்டுக் கட்டளை அதிகாரியைக் கேட்டுள்ளார்.

இப்பகுதியில் மீளக்குடியமர்வதற்கென வந்த முஸ்லிம் குடும்பங்கள் அப்பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக உள்ளதால் மீளக்குடியமர முடியவில்லை.

அவர்கள் தமது குடியிருப்புப் பகுதிகளை மீட்டுத் தருமாறு பிரதேச செயலரிடம் கோரியதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (8-117)

முட்கம்பிச் சுருளுக்குள் மோட்டார் சைக்கிள் சிக்கி இருவர் காயம்

தென்மராட்சி,ஏப்.21

வீதியின் அருகே வைக்கப்பட்டிருந்த முட்கம்பி சுருளுக்குள் மோட்டார் சைக்கிள் புகுந்து கொண்டதால் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் காயமடைந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை நுணாவில் ஏற்றத்தடி இராணுவ முகாமுக்கு முன்பாக இடம்பெற்றது.

முட்கம்பிக்குள் சிக்கியதால் காயமடைந்த சுன்னாகம், ஏழாலை கிழக்கைச்சேர்ந்த இராமு சுப்பிரமணியம் (வயது 65), உடுவில் முருகன் கோவிலடியைச் சேர்ந்த எஸ்.தர்மானந்தம் (வயது 62) ஆகியோர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வீதியில் வந்த வாகனம் செல்வதற்காக வீதியோரத்திற்கு செலுத்திய மோட்டார் சைக்கிள் முட்கம்பிக்குள் புகுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (-8-117)

37ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
05 – 02 – 1935

மறைவு
15 – 03 – 2004

திருமதி சோதிப்பிள்ளை கணேசமூர்த்தி

அன்புக்கோர் அணிகலனாய் அகிலத்தில் திகழ்ந்த அன்னையே
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (21.04.2004) புதன்கிழமை கரணவாயில் நடைபெறுகின்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (31069) (16-14-26)

- குடும்பத்தினர்.

ஒரு வருட நினைவுகளுடன்...

தோற்றம்
28 – 02 – 1957

மறைவு
03 – 05 – 2003

திருமதி திருஞானசோதி குணேந்திரன்

இருண்டுவிட்ட வாழ்வினிலே ஒளி வெள்ளம் பாய்ச்சி!
துவண்டுவிட்ட வேளைதனிலே துணிவதனை ஊட்டி!
வரண்டுவிட்ட பாதையிலே வசந்தத்தைக் காட்டி
துயர் மிகுந்த வேளைதனிலே துணையாகவும் நின்றாய்!

இன்றோ நீ இல்லை வீட்டினிலே ஒளியில்லை
காலங்கள் சென்றாலும் உன் நினைவுகளோடு நாம்...!

குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

-குடும்பத்தினர்.
(31040)(14)

ஒரு வருட நினைவஞ்சலி

மலர்வு
03 – 11 – 1975

உதிர்வு
03 – 05 – 2003

திருமதி அன்ரனி வாசுகி

திதி: 21-04-2004

எமது அன்புச் செல்வம் வாசுகி!
ஓடி மறைந்ததம்மா ஓராண்டு!
ஏங்கித் தவிக்கின்றோம் உன்பிரிவால்!
தினமும் பூக்கின்றாய் எம் நெஞ்சில்
மறுபடியும் எம்மிடமே மலரவேண்டும்!

என்றும் உன் நினைவுடன்:
ஆருயிர் அம்மா, பாசமிகு மாமா, மாமி,
இன்னுயிர் சகோதரிகள்,
அன்புமிகு மைத்துனர்கள்,
பாசமுடன் பெறாமக்கள்.

தகவல்:
குலசிங்கம் (மாமா),
கலிகைச் சந்தி.
கரவெட்டி.

(31052)(26-14)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
23 – 07 – 1982

உதிர்வு
22 – 03 – 2004

அத்தனாஸ் மேரி அனற்றா

மாதம் ஒன்று அவசரமாய்க் கடந்தாலும் மாண்டுவிட்டாய்
என்று சொல்ல மனம் மறுக்குதம்மா!
யோசிக்க யோசிக்க நிமிடம் கடந்தாலும் உன்
சிரித்த முகத் தோற்றம் எம் நெஞ்சத்தைக் கடக்காது!

மெலிஞ்சிமுனை,
கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை. (30896)(38-14)

உன்பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16 - 03 - 1925

மறைவு
03 - 05 - 2003

அமரர் கணபதிப்பிள்ளை கந்தையா

(ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர்)

திதி: 21-04-2004

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

"கௌரி மகால்"
மானிப்பாய். (30910)(34-14)

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

4 ஆவது ஆண்டு



2 ஆவது ஆண்டு

செல்வன் **அழுதலிங்கம் லோகநாதன்** (உடுப்பிட்டி அ.மிஷன் கல்லூரி மாணவன்)
திதி: நவமி (12.05.2004)

03-03-1979 ⇦ தாயின் மடியில் ⇨ 26-09-1985
27-04-2000 ⇦ இறைவன் மடியில் ⇨ 14-05-2002

செல்வி **அழுதலிங்கம் லதா** (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி)
திதி: நவமி (21.04.2004)

எங்கள் அருமைச் செல்வங்களை இழந்து இந்தப் பூமியில் நாம் வாழ்ந்து என்ன பயன் இறைவா? எங்கள் வாழ்க்கையில் நாம் கண்டமிச்சம் என்ன?
இறைவன் அடி சேருமட்டும் இத்துன்பத்தில் மீளமுடியாது!
உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல துவாளீப் பிள்ளையாரையும் கண்ணகி அம்பாளையும் வேண்டுகின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(30954)(14)

– குடும்பத்தினர்.

தமிழர் உரிமைகளைப் பேணும் சட்டங்களை

புதிய நாடாளுமன்றம் இயற்றுமா?

சுதந்திர இலங்கையின் பதின் மூன்றாவது நாடாளுமன்றத்தின் முத லாவது அமர்வு நாளையதினம் வியா ழக்கிழமை நடைபெற இருக்கிறது. இவ்வமர்வு சாதாரண அமர்வுகளைப் போலன்றிச் சற்று வித்தியாசமானது.

பொதுத் தேர்தலின் பின்னர் நடை பெறும் முதலாவது நாடாளுமன்றக் கூட்ட நடைமுறைகள் எவ்வாறு அமை யப் போகின்றன என்பதே இன்று நாட்டுமக்களின் எதிர்பார்ப்பாகும்.

சபாநாயகர் தெரிவு

இந்த அமர்வில் சபாநாயகர் தெரிவு முக்கிய இடத்தை வகிக்கின்றது. உண்மையில் நாடாளுமன்றத்தின் கதாநாயகன் சபாநாயகரே. அவரின் றிச் சபைக் கூட்டங்கள் நடைபெறமுடி யாது. ஆகவே, முதலாவது அமர்வில் சபாநாயகர் ஒருவரைத் தெரிவுசெய் யச் சபை முற்படும்.

இத்தகைய கூட்டங்கள் ஜனாதி பதியின் பிரகடனத்துக்கமையவே நடைபெறுவது வழக்கம். கூட்டம் ஆரம்பமாக வேண்டிய நேரத்தில் னமே செயலாளர் நாயகத்தால் முத லில் வாசிக்கப்படும். அதனையடுத்து, சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்ய நாடாளுமன்றம் முற்படும்.

தெரிவுமுறை

அநேகமாக அரச தரப்பைச் சார்ந்த ஒருவரே சபாநாயகராகத் தெரிவுசெய யப்படுவார். ஏனெனில், வழமையாக நாடாளுமன்றப் பெரும்பான்மை அவர் களுக்கே உரியது. சபாநாயகர் தெரிவு ஏகமனதாகவே நடைபெறவேண்டும் என்பதற்கு எந்தவிதமான சட்டதிட்ட மும் கிடையாது.

சுதந்திர இலங்கையின் பதின்மூன றாவது நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லாத நிலையில் சபாநாயகர் பதவி எவரைச் சென்றடையும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இரகசிய வாக்கெடுப்பு மூலம்

ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத் தவர்களின் பெயர்கள் சபாநாயகர் பதவிக்கு முன்மொழியப்பட்டு வழி மொழியப்படுமிடத்து, வாக்குச்சீட்டு மூலம் சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்வதற்குச் சபை நடவடிக்கை மேற் கொள்ளும். வாக்களிப்பு முறை பரக சியமானதல்ல. இரகசியமானதே. முடி வைச் செயலாளர் நாயகம் அறிவிப் பார். ஏகமனதாகவோ, வாக்கெடுப்பு மூலமோ தெரிவுசெய்யப்படும் சபாநாய கர் முன்மொழிந்தவர் வழிமொழிந்த வர் ஆகிய இருவரினாலும் சபாநாய கரது ஆசனத்திற்கு அழைத்துச் செல லப்படுவார். அவ்விதம் சபாநாயகர் அவர்கள் தமது ஆசனத்தை அடைந் ததும் சபையின் இருதரப்பினருக்கும் சிரம்சாய்த்துச் சம்பிரதாயபூர்வமான முறையில் நன்றி செலுத்திவிட்டுத் தமது சிங்காசனத்தில் அமர்ந்து கொள்வார். இப்பொழுது சபாநாயகர் அவர்களது தலைமையிற் சபை அதிகாரபூர்வமாகக் கூடிவிட்டது என்பது உறுதிப்படுத்தப்படும்.

பாராட்டுரைகள்

தொடர்ந்து புதிய சபாநாயகரைக் கட்சித் தலைவர்கள் வாழ்த்தியும் பாராட்டியும் உரை நிகழ்த்துவது சம் பிரதாயமாகும். புதிய உறுப்பினர்கள சபாநாயகர் அவர்கள் தமக்குப் பல துப் பாராட்டுவார்கள். பழம்பெரும் அரசியல்வாதிகள் சபையின் மரபு களையும் பாரம்பரியங்களையும் ஞாப கப்படுத்திப் புதிய சபாநாயகர் அவர் கள் அரச கட்சி, எதிர்க்கட்சி என்று பாகுபாடின்றிச் சேவைபுரிவார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து வாழ்த்து வார்கள். சிறுபான்மை இன அங்கத் தவர்கள் தமது கோணத்தில் வாழ்த்து வார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் 1965ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி சேர். அல்பேர்ட் எவ்.பீரிஸ் அவர்கள் சபா நாயகராகத் தெரிவுசெய்யப்பட்டபோது, நிகழ்த்தப்பட்ட வாழ்த்துரைகளில் ஒன்றை மட்டும் இங்கு உதாரணத் துக்காகப் பார்ப்போம்.

ஜீ.ஜீ.பொன்னம்பலம்

"ஜீ.ஜீ.பொன்னம்பலம் (யாழ்ப் பாணம்): இந்தச் சபை தன் உறுப் பினர் ஒருவருக்குச் செலுத்தக் கூடிய அதிஉயர்ந்த நிலைக்குத் தாங்கள் உயர்த்தப்பட்டுள்ளதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப் பட முன்னர் தேர்தல் ஒன்றைத் தாங்கள் எதிர்நோக்க வேண்டியி ருந்தமை உண்மைதான். ஆயினும், தாங்கள் ஏதாவது கட்சி ஒன் றைச் சார்ந்தவர் என்பது இந்தக் கணமே தங்கள் நினைவிலிருந்து நீங்கிவிட்டது என்பது பற்றி எனக்கு எவ்வித ஐயமுமில்லை. இந்தச் சபையின் விவாதங்கள் பரி மளிப்பனவாக இருக்கும் என்பது மாத்திரமன்றி கூச்சல் நிறைந்தவை யாகவும் இருக்கும் என்பதையும் நாம் அறிந்துள்ளோம்.

இந்தச் சபையிலே கூறப்படும் சில கூற்றுக்களைச் சில சந்தர்ப்பங் களில் தங்கள் காதுகளில் விழாத வையாகவே கணித்துக்கொள்ளு தலும் தேவையென்றே நம்புகின் றேன். சில சந்தர்ப்பங்களில் நாம் முரண்டுத்தனமானவை அல்லது மகிழ்ச்சியற்றவை எவற்றையேனும் கூறினால் அவை எமது கடமைப் பொறுப்புப் பற்றிய ஒரு கருத்தின் காரணமாக அமையுமேயன்றி தங் கள் உன்னத அதிகாரத்தை மீற முனையும் செயல்களாக அமையா: தாங்கள் இந்த நாட்டிலும் சரி நாட்டிற்கு வெளியிலும் சரி இம் முழுச் சபையினதும் ஏக பிரதி நிதியாக அமைவதால் தாங்கள் இப்பதவியில் உயர்த்தப்பட்டமை குறித்துத் தெரிவிக்கப்பட்ட புகழ்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் நான் பெரும் பங்கு கொள்கிறேன்.."

யாழ்ப்பாணத் தொகுதி நாடாளு மன்ற அங்கத்தவர் ஜீ.ஜீ. அவர் களது மிக உச்சமான கருத்தென்றே இதனைக் கொள்ளலாம்.

சபாநாயகரின் பதிலுரை

பல பாராட்டுக்களின் இறுதியில் மாண்புமிகு சபாநாயகர் சேர். அல் பட் எவ்.பீரிஸ் அவர்கள் கூறியதா வது:-

"கௌரவ பிரதமர் அவர்களே! கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே! கௌரவ உறுப்பினர் களே! இன்று நீங்கள் எனக்குத் தெரிவித்த நல்லாசிகளுக்கும் பாராட்டுதல்களுக்கும் நான் இத யம் நிறைந்த நன்றி கூறுகின்றேன். என்மீது நீங்கள் பெரிய பொறுப் பொன்றைச் சுமத்தியிருக்கிறீர்கள் என்பதை உணர்ந்துள்ளேன். உங் கள் திருப்திக்கு ஏற்றவகையில் என்பொறுப்புக்களை நிறைவேற்ற உங்களது ஒத்துழைப்பை நீங்கள என்றும் நல்குவீர்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. இந் தச் சபையின் கௌரவத்தைப் பேணுவதிலும் எந்தக் கட்டத்திலும இந்தச் சபையின் மரபுகள், உரி மைகள், சிறப்புரிமைகள் என்பன வற்றைப் பாதுகாப்பதிலும் உங்க ளது அந்த ஒத்துழைப்பு எனக் குப் பெரிதும் தேவை. இந்தச் சபைபிலே நிலை விதிகள் இருக் கின்றன. பின்பற்றக்கூடிய முன்னு தாரணங்கள் இருக்கின்றன. கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் இதற் கமைய நடந்தால் எனக்குப் பிரச் சினை ஏதுவும் இருக்காது.

நண்பனாக இருக்கவே விரும்புகிறேன்

பல புதிய உறுப்பினர்கள் இங்கே இருக்கின்றார்கள். அவர்களுக்கு இவை பரிச்சயமற்றவையாக இருக் கலாம். எனவே, அவர்கள் அவ் விதிகளுக்குத் தம்மைப் பரிச்ச யப்படுத்திக் கொள்ளுதல் அவர் களது கடமை. இச்சபையிலுள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு நண்பனாக இருக்கவே நான் விரும்புகின்றேன் புதிய உறுப்பினர் கள் எவருக்கும் பிரச்சினைகள் ஏதும் இருப்பின் எந்தநேரத்திலும் அவர்கள் என்னைச் சந்தித்து அவை பற்றிப் பேசலாம். எனது சக்திக்கு ஏற்றவகையில் அவர் களுக்கு வழிகாட்டவும் உதவவும் நான் விரும்புகின்றேன். அவர்களின நல்லெண்ணம், நம்பிக்கை, ஒத்து ழைப்பு ஆகியவற்றை நான் மிக வும் பணிவுடன் கோருகின்றேன். இவை எனக்கு நிறைந்த அளவில் கிடைக்கும் என்பது உறுதி. என் கட்சிக் கோலங்கள் அனைத்தை யும் நான் துறந்துவிட்டேன். தனி நபர் சுதந்திரத்தினதும் நாடாளு மன்ற ஜனநாயகத்தினதும் பேர ணாக இச்சபையை ஆக்குவன மரபு வழிவந்த பாரபட்சமின்மை, சுதந்திரம், ஒழுங்கு என்பனவே யாம். இந்தப் பாரம்பரியங்களைப் பேணுவதில் நான் எனது சக்திக் கேற்ப நடந்துகொள்வேன் என உறுதி கூறுகின்றேன்".

ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் எத்தகைய மிகமிக உயர்ந்த கோட் பாடுகளைச் சபாநாயகரிடமிருந்து எதிர்பார்த்தாரோ அவற்றுக்கெல்லாம் மிகமிகக் காத்திரமான மிக உயர் வான பதிலாக அன்றைய சபாநாய கரின் பதில் அமைந்திருந்தது.

நாடாளுமன்றத்தின் கதாநாயகன்

உண்மையில் நாடாளுமன்றத்தின் கதாநாயகன் சபாநாயகரே. நாடாளு

- செல்லப்பா நடராசா -

மன்ற ஜனநாயகம் நிலவும் நாடுகளில் பதவிவழியாக மாத்திரமன்றி மரபு வழியாகவும் சபாநாயகருக்கு மிக அதி உயர்ந்த ஒரு ஸ்தானம் உண்டு. நாடாளுமன்றச் சட்டதிட்டங்களினதும் சம்பிரதாயங்களினதும் காவலனாக விளங்குபவரும் அவரே. தம் சிறப்புரி மைகளைப் பொறுத்த அளவில் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் தங்களது பாதுகாவலனாக என்றும் ஏற்றிப் போற்றுவதும் சபாநாயகரைத்தான்.

பிரதம பண்பு

"சபாநாயகர் பதவியினது பிரதம பண்பு நடுவு நிலைமையும் அதிகார ஆளுமையுமேயாம்" என்று விவரிக் கின்றார் பிரித்தானிய நாடாளுமன்ற நடைமுறைகளில் மகா பண்டிதர் எனப் போற்றப்படும் எஸ்கின் மே அவர்கள்.

இலங்கையின் அதிஉயர்ந்த பிர முகர்களின் வரிசையில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு அடுத்த ஸ்தா னம் சபாநாயகருக்கே உரியதாகும். முன்னர் முடியாட்சியில் மன்னர்கள் வசம் இருந்த செங்கோல் இன்றைய குடியாட்சியில் சபாநாயகர் வசமே உள்ளது.

பிரமாணம் செய்தல்

இவ்விதம் மாண்புகள் மிகு சபா நாயகர் தெரிவை அடுத்து அவரது பதிலுரையின் பின்னர் சபாநாயகர் அவர்களும் அவரைத் தொடர்ந்து உறுப்பினர்களும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்து சபாபீடத்திலிருக்கும் அதற்கென உள்ள பதிவேட்டில் கைச்சாத்திடுவார்கள்.

ஒன்பது சபாநாயகர்களின் கீழ் கடமையாற்றிய எனக்கு நாடாளு மன்றம் எப்பொழுதும் ஜனநாயகத்தின கோவிலாகவே தென்படுவதுண்டு. சுதந்திர இலங்கையின் பதின்மூன்றா வது நாடாளுமன்றம் கூடுகையில் அதன் சில நடைமுறைகளைப்பற்றி உதயன் வாசகர்கள் சிந்திப்பது இயல் பானதே.

புதிய நாடாளுமன்றம் தமிழ் பேசும் மக்களது உரிமைகளைப் பேணும் சட்டங்களை இயற்றுமென நம்புவதற்கான ஏதுக்கள் உண்டா? ★



இலங்கையின் ஆவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்ட சேர் அல் பேர்ட் எவ். பீரிஸ், அப்போதைய கவர்னர் ஜெனரல் வில்லியம் கோபல்லாவ, காணி, நீர்ப்பாசன மற்றும் மின்சக்தி அமைச்சர் சி.பி.டி.சில்வா மற்றும் தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே. வி.செல்வநாயகம் ஆகியோருடன்.

நாளை கூடும் இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்றம்

உறுப்பினர்கள் அனைவரும் சபா மண்டபத்தில் வந்துகூடுவர். உரிய நேரப்படி பேரவையின் படைக்கலச் சேவிதர், சபாநாயகரதும் சபையினதும அதிகாரச் சின்னமான செங்கோலைத் தாங்கிய வண்ணம் சபா மண்டபத்துள பிரவேசித்து நேரே சபாநாயகரது பீடத் துக்குச் சென்று செங்கோலை வழமை யான அதன் இடத்தில் வைக்காமல் அதற்கென உள்ள மற்றோர் இடத் தில் வைப்பார். அதுவரை உறுப் பினர்கள் அனைவரும் எழுந்து நிற் பார்கள்.

சில மாற்றங்கள்

புதிய சபாநாயகர் ஒருவரைத் தெரிவுசெய்ய நேரிடும் சந்தர்ப்பங் களில் பேர்வைக் கூட்டங்களுக்கும் படைக்கலச் சேவிதர் செங்கோலை எடுத்துவரும் முறையிலே சிலமாற்றங் களைக் காணமுடியும். இவ்வாறான கூட்டங்களுக்குப் படைக்கலச் சேவி தர் வழமைபோல் செங்கோலைத் தமது வலக்கையால் பிடித்து வலது தோளில் தாங்கி வரமாட்டார். இதற் குப் பதிலாகச் செங்கோலை இடது கரத்தினாற் பிடித்து இடது தோளில் தாங்கியபடி சபைக்குள் பிரவேசிப்பார்.

கட்டுரையாளர், முத்த பத்திரிகையாளரும் எழுத்தாளரும் மட்டுமன்றி 30 வருடங்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் அச்சபையின் விவாதங்களின் அதிகார அறிக்கையின் (ஹன் சார்ட்) முத்த அறிக்கையாளராகப் பணிபுரிந்தவர். நாடாளுமன் றத்தின் நடைமுறைகள் குறித்த அறிவும் அமர்வுகளை நேரில் பார்த்த அனுபவமுமுள்ளவர்.

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

யாழ்.பிரதான வீதி, மக்கள் வங்கிக்கு அண்மையில், 3ஆம் குறுக்குத் தெருவில் 2 பரப்புக் காணியுடன் இரண்டு வீடுகள் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: சேகர், T.P.: 0777 171745. (30808)

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதியில் இளைப்பாறிய புகையிரத நிலைய அதிகாரி செல்லப்பு அவர்களின் வீட்டுக்குப் பின்னால் 4¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கிணறும் மலசலகூடமும் பயன்தரு மரங்களும் நிறைந்த இக்காணியை வாங்க விரும்புபவர்கள் உதயன் பணிமனையில் கடமையாற்றும் பத்ம லோசனி இராசதுரை என்பவருடன் தொடர்பு கொள்ளவும். (சி-34555)

கோப்பாய் தெற்கு, கட்டப்பிராய் வண்ணான் குளத்திற்கு முன்னால் (பருத்தித்துறை வீதியில்) வீடு கட்டக கூடிய 2 பரப்புத் தென்னங்காணி விற்பனைக்குண்டு. (அதிக விலை கேட்போருக்குக் கொடுக்கப்படும்) தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க.சந்திரகுமார் (தவம்) 'பரரூபன்ஸ்' (லொறி உரிமையாளர்) பிரதான வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.(31088)

வட்டுக்கோட்டை சித்தன்கேணி வீதியில் நொத்தாரிஸ் ஒழுங்கையில (ஞானம் கடையிலிருந்து கிட்டத்தட்ட ஐந்தாவது ஆதனம்) வெறுங்காணி 7 பரப்பு, வீடும் காணியும் 5 பரப்பு, நெல்வயல் 23 பரப்பு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவஞானம் ஞானசுந்தரன், C/o சி.எம் இராஜேந்திரா, வட்டுகிழக்கு, வட்டுக்கோட்டை. (31090)

தரமான நம்பர் - 1 பகிர் இன புறொயிலர் குஞ்சுகள் 21.04.2004 இன்று மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும் தொடர்பு: றாஜீவ் ஆனைக்கோடைச் சந்தி. T.P: 3529, 2867. P.ரவி தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. (31046)

தரமான அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் (சிகப்பு/வெள்ளை) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தியடி, நல்லூர். (31091)

8 ஸ்ரீ XXXX தொடரிலக்கமுடைய பேர்ஜோ கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை. (31065)

காணவில்லை

ஆறு வயதுடைய அல்சேசன் கறுப்பு, மண்நிற பெண் நாயைக் காணவில்லை. தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். மா.தர்மலிங்கம், காளி கோவிலடி, கோண்டாவில் கிழக்கு. (31086)

தேவை

நிறைகூடிய புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. 0777 834525 இலக்கத் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் நேரில் வந்து கொள்வனவு செய்யப்படும். (C/34554)

தவறிவிட்டது

ஒட்டுமடத்தைச் சேர்ந்த த.கஜேந்திரா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 821182271V), தொலைபேசி இலக்க விவரப் புத்தகம் என்பன அடங்கிய பணப்பையொன்று கடந்த 16-04-2004 வெள்ளிக்கிழமை மானிப்பாய் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 29/10, தேவாலய வீதி. ஓட்டுமடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (31103)

பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி ஆர்.சி.ரி. மருசலீன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.445550087V) கடந்த 11.01.2004 அன்று 368/4 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுள்ள வீட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 264, பிரதான வீதியிலுள்ள ஜஸ்வா என்பவரிடம் ஒப்படைத்து உதவவும் சன்மானம் வழங்கப்படும். (31074)

மோட்டார் சைக்கிளின் பற்றறி மூடி (Qm100 என எழுதப்பட்டது) ஒன்று புன்னாலைக்கட்டுவனுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் நேற்று (20.04.2004) காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திலீபன், ஏழாலை தெற்கு என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P.: .0777 177259. (31094)

கோப்பாயைச் சேர்ந்த சண்முக ராஜா சசிஸ்குமார் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0903003541), பல்கலைக்கழக அடையாள அட்டை என்பன கடந்த 16.04.2004 வெள்ளிக்கிழமை சுன்னாகத்திற்கும் மல்லாகத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் சந்திக்கு அருகிலுள்ள நித்தியா ஸ்பொட்டில் ஒப்படைத்துதவவும். (31076)

NEWTON
342, ஸ்ரான்லி வீதி.
B.A. PART I
ENGLISH
PAPER CLASS (31101)
பிரிவு I ஆரம்பம்:
24.04.2004 காலை 7.30 (பு.நே.)
G.A.Q. நடைபெறுகின்றது.

வேலை ஆள்கள் தேவை
1. ஒட்டி மேக்கர்
2. ஜஸ்கிறீம் மேக்கர்
3. சப்ளையர்
4. சமையற்காரர்கள் (புரியாணி தயாரிப்பாளர்)
5. சிட்டை எழுதுநர்
சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.
(சி-34563) (24)
திறிஸ்டார் ஹோட்டல்
162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

வணிக ஜோதி வெளியீட்டு விழா

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வணிக மாணவ மன்றத்தின் 'வணிகஜோதி' 21ஆவது மலர் வெளியீட்டு விழா இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் வணிக மாணவர் மன்றத்தலைவர் க.மதுசாந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்த வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் மா.சின்னத்தம்பியும், சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரனும் கலந்துகொள்வார்கள்.

நூலின் வெளியீட்டுரையினை யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா.வனனிசிங்கமும், அறிமுகவுரையினை யாழ் பல்கலைக்கழக பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பேரின்பநாதனும் நிகழ்த்துவார்கள்.(-8-ரி)

கோவளம் சிக்கன கூ.சங்க உறுப்பினருக்கு!

நீண்டகாலமாகச் செயற்படாமல் இருந்த காரைநகர், கோவளம் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் செயற்பட வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதல் நடவடிக்கையாக சங்கத்தின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக் கிழமை காலை 10மணிக்கு கோவளம் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் உறுப்பினர்கள் முன்னர் மேற்படி சங்கத்துடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் அங்கத்துவம் தொடர்பான பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன. எனவே கலந்துரையாடலில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் அனைவரும் தமது பாஸ் புத்தகத்துடன் வருகை தந்து சங்கம் மீண்டும் செயற்படுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கேட்டுள்ளார். (ஐ-10)

கைப்பணிப் பயிற்சி நிலையத் திறப்பு விழா

பனை அபிவிருத்திச் சபையின் கைப்பணிப் பயிற்சி நிலையமொன்று நாளை மறுதினம் முற்பகல் 10.30 மணிக்கு காரைநகரில் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்தத் திறப்புவிழாவில காரைகர் பிரதேச செயலர் வே.சாம்பசிவம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (8-ரி)

தேவை
சாவகச்சேரி நகரப் பகுதிக்குள் பிரதான வீதிகளுக்கு அருகில் 3பரப்புக்கு மேல் வெற்றுக் காணி குத்தகைக்குத் தேவை.
தொடர்பு:
HDL - HUDEC MCR PROJECT
- 14,மத்தியூஸ் வீதி, தியோகு பாதை - யாழ்ப்பாணம்.
021 - 222 3877.
(31102)

கூறுவிலை கோரல்

2004.05.06ஆம் திகதி முதல் 2004.05.31ஆம் திகதி வரை நடைபெறவுள்ள க.பொ.த. (உ/த) பரீட்சை ஆவணங்களை யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலிருந்து கொண்டு செல்வதற்கு மோட்டார் வண்டிகளை வாடகைக்கு அமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இச்சேவைக்கு தங்கள் மோட்டார் வண்டிகளை வாடகைக்கு விட விரும்பும் உரிமையாளர்கள் இவ்வலயக் கல்வி அலுவலகத்தினால் விநியோகிக்கப்படும் படிவத்தில் 2004.04.30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கோரப்படுகின்றனர்.

திருமதி றெ.இருதயநாதன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.
(C/34566)(21-12-18)

NORTH EAST TECHNOLOGIES (NET)
விசேட கணனிகள்!! புதியவை!

Pentium - 4, 1.8GHz Mercury Mother Board 128MB DDR Ram 40GB HDD ATX - P-4 Casing Ps2 Key board, mouse and pad 52X CD Rom 15" LG Monitor 52,000/=	Pentium - 4, 2.8 GHz Mercury Mother Board 256MB DDR Ram 40GB HDD ATX - P-4 Casing Ps2 Key board, mouse and pad 52X CD Rom 15" Monitor 62,900/=

Pentium - 4, 2.0GHz
256MB Ram
40GB HDD
15"LG Monitor
Ps2 Key board, mouse and pad
52X CD Rom
ATX - P-4 Casing
15" Monitor
54,000/=

AMD Arhlon 2.0GHz
128 Ram
40GB HDD
46,000/=

UPS - Powertre
4,200/=
விசேட விலை
April 30th மட்டுமே!

தொடர்பு: 34,Saddanathar Road, Nallur, Jaffna.
T.P.: 021 - 222 3786.
0777 - 708498 (hot line).
(C/34564) (26-21-18-12)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20
12
1930

மறைவு
13
05
2002

அமரர் **தம்பையா கணபதிப்பிள்ளை**

ஆண்டிரண்டு ஆனாலும் ஆறுதில்லை எம்மனம்
ஈண்டுமது நினைவாகவே இவ்வுலகில் வாழ்கின்றோம்.

மாவில் வீதி,
புற்றளை, புலோலி தெற்கு, புலோலி.

- குடும்பத்தினர்.
(31107) (24-13-18-21)

A/L பரீட்சையின் பின்னர் → இந்தியாவில் கல்வி → மூன்று ஆண்டுகளில்

பிரிந்தாவன் கல்லூரி
BRINDAVAN COLLEGE

(முன்னர் தேசிய முதல்தரக் கல்லூரி)
2nd Cross, Bhoopasandia, RMV Extn. 2 nd Stage, Bangalore 94
Tele: (0091-80) - 23414557, 23417833 Fax 0091 -80-23615621, 23417832
E.mail : nfgc @ bgl. vsnl. net. in. Web site : www.nfgcollege.com.

பெங்களூர் பல்கலைக்கழக பட்டம்

22.04.04 இரவு 10.30 இற்கு "EYE" அலைவரிசையில் தொலைக் காட்சி நிகழ்ச்சியினைத் தவறவிடாதீர்கள்.

இளநிலைப் பட்டப்படிப்பு பாடநெறிகள்
B.Sc. - உயிரி தொழில்நுட்பம்.
B.Sc. - மரபணுவியல்
B.Sc. - நுண்ணுயிரியல்.
B.Sc. - கணனி விஞ்ஞானம்.
B.B.M. - தொழில் முகாமைத்துவம்.
B.C.A. - கணனி பிரயோகம்.
B.Com. + வர்த்தகம் + கணனி

பட்டப்பின் பாடப்பு பாடநெறிகள்
M.Sc. - நுண்ணுயிரியல்.
M.Sc. - உயிரி தொழில்நுட்பம்.
M.B.A.- தொழில் நிர்வாகம்.
M.C.A.- கணனி பிரயோகம்.

Company Secretarial Services (Pvt) Ltd.
285 C- 1/1, ஸ்ரான்லி திலகரட்ண மாவத்த, யூபிலி போஸ்ற், நுகேகொட.
Tel : 011- 285 438 / 0777- 387273
E-mail : Yapad Sol LK.

இலவசக் கருத்தரங்கு
சித்திரை மாதம் 25ஆம் திகதி ஞாயிறு காலை 10.00 மணிக்கு
உடனடி அனுமதிகள்
(Spot Admissions)
ஏப்ரல் 25ஆம், 26ஆம் திகதிகளில் காலை 11.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை.
கொழும்பு ஹில்டனில்
அதிபர்/ நிர்வாக நம்பிக்கையாளரால் நடத்தப்படும்.
கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டம்/ தவணைமுறைக் கட்டணம்/கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்.

பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் 2004 ஆம் ஆண்டு A/L மாணவர்கள் ஒதுக்கீடு பெறலாம்.
ஒரு வருடத்தைச் சேமிக்கலாம்.

- தகுதிகள் :- 2 A/L சித்திகள்
- 100% பெறுபேறுகளைப் பெற்றுள்ளது. அவை யாவும் முதலாம் வகுப்புச் சித்திகள்.
- M.Sc. நுண்ணுயிரியல் முதுமானித் தேர்வில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளது.
- 260 இலங்கை மாணவர்கள் 41 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் கல்வி பயில்கின்றனர்.
- ஆண்கள், பெண்களுக்குத் தனித்தனியான விடுதி வசதிகள்.
- கடந்த 10 ஆண்டுகளில் 250 இலங்கை மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளனர்.
- ICCR உடான புலமைப் பரிசில் உண்டு.
- முற்பதிவுக் கட்டணம் U.S.$ 40

மேலதிக விவரங்களுக்கு:- திரு. எம்.குணசேகர.
038- 2232657, 038-2234154.

(C/34562) (40)

மருத்துவ உலகில் இன்றும் சவாலாகும் காசநோய்!

விஞ்ஞான தொழில்நுட்பம் மிக வளர்ச்சியடைந்துவரும் இந்நாளில் மருத்துவத்துறையிலும் பல வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது என்பது நாம் யாவரும் அறிந்த உண்மை. நோய்க்குரிய சிகிச்சை முறைகளும் நோயைக் கண்டுபிடித்து உறுதிப்படுத்தும் ஆய்வுகூடப் பரிசோதனைகளும் பாரிய அளவு முன்னேற்றத்தினை அடைந்துள்ளன. இருந்தும் மருத்துவ உலகிற்குக் காசநோய் (Tuberculosis) இன்று வரை பெரும் சவாலாகவே இருந்து வருகின்றது. இன்றைய மருத்துவ வளர்ச்சி அதன் ஆரம்பநிலையிலே கண்டுபிடிக்கக் கூடிய வசதியினை அடைந்துள்ளதால் இந்நோயின் தாக்கத்திலிருந்து ஓர் எவு விடுபட உதவுகின்றது.

இந்நோய் 1882.ஆம் ஆண்டு றோபேட் கோக் (Robert Koch) என்பவரால் முதன்முதல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்நோய் கூடுதலாக மைக்கோ பற்றீரியம் ரீபோகுலோசிஸ் என்று ஒருவகை பசிலஸ்சினால் ஏற்படுத்தப்படுகின்றது. (AFB) இந்நோய் மிக வேகமாகப் பரவக்கூடியது. காற்றினால் மிக வேகமாகப் பரவக் கூடியது. இந்நோயை ஆரம்பத்திலே வைத்திய பரிசோதனை மூலம், வைத்தியரினால் கண்டுபிடித்து உரிய சிகிச்சை அளிக்கப்படும்போது நோயில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

நோய்அறிகுறிகள்

இந்நோய் ஆரம்பகாலத்தில் பின்வரும் அறிகுறிகள் தென்படும்போது உடன் வைத்திய ஆலோசனையினைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும்.

★ காய்ச்சல், அதுவும் இரவில் காய்ச்சல், காய்ச்சல் வரும்போது வியர்வை தோன்றல்.

★ சளியுடன் கூடிய இரத்தம் வெளியேறல்.

★ நெஞ்சு நோ.

★ நிறைகுறைதல்

★ பசிக்குறைவு

★ களைப்பு

★ இரத்தசோகை (An[illegible])

அறிகுறிகள் தென்படும்போது வைத்தியரை அணுகி பரிசோதனை செய்தல் வேண்டும். நிணநீர் கணுக்கள் (Lymph gland) வீக்கம் அடைதலும் காணப்படும் உரிய பரிசோதனைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

தற்பாதுகாப்பு

★குழந்தைகளுக்கு காசநோய் தடுப்பூசி ஏற்றப்படுதல் வேண்டும். பி.சி.ஜி (Bacillus of calmette and Guerin) அல்லது குழந்தையில் ஏற்றத்தவரின் ஐந்து வயதுக்குள் வைத்திய ஆலோசனையின்படி தடுப்பூசி ஏற்றப்படல் வேண்டும்.

காசநோயில் பல வகையுண்டு, அவற்றில் சில:

★சுவாசப்பை காசநோய் (Pulmonary Tuberculosis)

இது சாதாரணமாக கூடுதலாகக் ஏற்படும் காசநோயாகும்

★சிறுநீரகம், சிறுநீரகத் தொகுதி காசநோய் (Renal and urinogenital tuberculsis)

★மூளைக் கவசஉறை அளர்ச்சி காசநோய் (Tuberculosis menin gitis)

இது சிறுவர்களையும், இளம் பிள்ளைகளையும் கூடுதலாக பாதிக்கக் கூடியது.

இந்நோய் எப்படியான சந்தர்ப் பங்களில் வெளிக்கொணரக் கூடிய தாக இருக்கும்?

★உடல் ஆரோக்கிய நிலை குன்றும் போதும். (Due to Poor health)

★போசாக்கு குறையும் போதும் (Malnutrition)

★உடல்நோய் எதிர்ப்பு சக்தி குறையும் போதும்,

போன்ற சந்தர்ப்பங்களில் நோய் வெளிக்கொணரப்படும்.

நோயில் இருந்து பாதுகாத்துக் கொள்வது எப்படி?

★மேற்குறிப்பிட்ட நோய் அறிகுறிகள் ஏற்படும் சமயத்தில் இந்நோய் சம்பந்தப்பட்ட வைத்திய அதிகாரியினை சந்தித்து உடல் பரீட்சை, ஆய்வு கூட பரீட்சையினை மேற்கொண்டு ஆரம்பத்தில் கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

★நோய் பரிசோதனையின் மூலம இனம் காணப்படின் அதற்குரிய சரியான மருந்து வில்லைகளினை ஆய்வு கூடப் பரிசோதனை மூலம் கண்டு அறிந்து சரியான மருந்தினை வழங்குதல் வேண்டும். இதனால் தேவையற்ற மருந்துகளை வழங்குதல் தவிர்க்கப்படல், உரிய மருந்து வழங்குவதனால் நோயாளி பக்க விளைவு இன்றி நோயில் இருந்து உடன் குணமாகும் நிலை ஏற்படும். (Tuberculosis, ABST)

செ.செல்வரட்னம்
பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
சுகாதார நிலையம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

★நோயாளியை வைத்திய ஆலோசனைப்படி பராமரித்தல்.

★நோயாளி பாவிக்கும் பொருள்களை உடனுக்குடன் கொதிக்க வைத்து சுத்தம் செய்தல் வேண்டும்.

இட்டடி செய்வதன் மூலம் நோயில் இருந்து பாதுகாத்துக் கொள்ளமுடியும். இதனால் மற்றையோரையும் இந்நோய் பாதிக்காதவாறு காப்பாற்றிக் கொள்ள முடியும்.



நோயை உறுதிப்படுத்திக் கொள்ளல் எப்படி?

★வைத்திய அதிகாரி ஆலோசனைப்படி,

+நோயாளியின் சளி
+முள்ளந்தண்டு பாயம் (C.S.F)
+நெஞ்சு கதிர்வீச்சு (Chest X-ray)
+செங்குருதி உறையும் வீதம் (ESR) பொதுவாக இது மிக கூடுதலாக இருக்கும்.
+வெண்குருதி துணிக்கைகள் எண்ணிக்கை (WBC) இது குறைவாகக் காணப்படும்.

மேற்கூறப்பட்ட ஆய்வுகூட பரிசோதனை மேற்கொள்ளுவதன் மூலம நோயை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

உரிய, துரித நடவடிக்கை, [illegible] தியப் பரிசோதனை, ஆய்வுகூடப் பரிசோதனை, உரிய பராமரிப்பு மேற்கொள்ளுவோம் ஆனால் காசநோயில் இருந்து நாம் தப்பித்துக்கொள்ள முடியும். ★

சித்த மருத்துவத்தின் பார்வையில் நீரிழிவு நோய்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது சான்றோர் வாக்கு. நோயானது எமக்கு அழையா விருந்தாளி போன்றது. ஆனால், நோயில்லாது இருப்பது மாத்திரம் நிறைவு வாழ்க்கையாக கருதிவிட முடியாது. மனஅழுத்தம் இன்றி குதூகலமாக இருத்தல் மிக அவசியமாகும். நீரிழிவு நோயைப் பற்றி பற்பல சஞ்சிகைகளில் கட்டுரைகள் வெளிவந்துள்ள போதிலும் மக்களுக்கோ சந்தேகம் தீர்ந்தபாடில்லை. ஒரு பகுதியினரோ இதைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாமல்தான் உண்டு. தனது சாப்பாடு உண்டு எனக் காலத்தை கழித்து வருகின்றனர். இந்நோயை தனிநபர் பிரச்சினையாக நோக்காமல் சமுதாயப் பிரச்சினையாக நோக்கும் காலம் இது. நவீன வாழ்க்கை முறைகளாலும், மனஅழுத்தங்களாலும் இளம்வயதினர்கூட இதற்குப் பலியாக நேரிட்டுள்ளது.

மற்றைய நோய்களைப்போல் வைத்தியம் பார்த்தோம் தீர்ந்தது என்றில்லாமல் நிழலாய் பின்தொடருகின்ற சோகம் இது. ஆங்கில மருத்துவர்கள் இதை வெல்ல நீரிழிவு வெல்லமல்லாத நீரிழிவு என இரண்டாக பிரித்துள்ளார்கள். சித்தமருத்துவர்களோ இதை 20 வகையாகப் பிரித்துள்ளார்கள்.

(i) வாதம் 4 - உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி மூலம் குணப்படுத்தலாம்.

(ii) பித்தம் 6 - மருந்தின் மூலம் குணப்படுத்தலாம்.

(iii) கபம் 10 - குணப்படுத்த முடியாது. ஆனால் இதன் தீவிர நிலைமையை வேண்டுமானால் குறைக்கலாம்.

உடல் உழைப்பு இல்லாமை, அதிகமாக மாமிசம் உண்பது, அதிகமான மனக்கவலை, போதைப் பழக்கம், எல்லைமீறிய போகம், அதிகமாக தூக்கம் அல்லது தூக்கமின்மை, பட்டினி இருத்தல் அல்லது எப்போதும் அதிகமாக உண்பது, பயந்து பயந்து வாழ்தல், பரம்பரையாக வரும் நோய்த்தாக்கம், அதிகமான இலிப்பு வகைகளை சாப்பிட்டுக் கொண்டே இருத்தல் போன்றவை நீரிழிவு நோய்க்கு காரணமாக அமைகின்றன.

சித்த வைத்திய சிகிச்சைக் கிரமத்தைப் பொறுத்தவரையில் ஒளடதம் அதாவது மருந்து, ஆகாரம் அதாவது பத்தியவுணவு செய்கைகள் அதாவது உடற்பயிற்சி ஆகிய மூன்றும் முக்கிய இம்பெறுகின்றன. பெரும்பாலான நோய்களுக்கு முக்கிய காரணம் ஆகாரங்களில் உள்ள போசாக்குக் குறைபாடுகளேயாகும். எனவே, ஒளடதம் அக்குறைபாடுகளை நீக்குகிறது. அதனால்தான் திருவள்ளுவர்கூட மருந்து என்ற தலைப்பில் கூறியுள்ள பத்து குறள்களில் ஆறு உணவு பற்றி யதாகவே உள்ளது. "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு" என்று கூறி "உணவே மருந்து" என்ற உண்மையை அவர் அதன் மூலம் உலகிற்கு உணர்த்தியுள்ளார் போல் தோன்றுகிறது.

சித்த மருத்துவத்தில் பல ஆண்டுகளாகச் செய்த ஆராய்ச்சியின் விளைவாக தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்துகள் பல உண்டு. இவை IMPCOPS மருந்து தயாரிப்பு முறை மூலம் நெறிமுறைபடுத்தப்பட்டு அனைவரும் நம்பத் தகுந்த விதத்தில் தயாரிக்கப்படுகிறது. சித்தமருந்துகளை ஒரு நோய்க்காக எடுத்துக்கொள்ளும்போது உடம்பில் இருக்கின்ற மற்ற நோய்களையும் தீர்க்கும் என்பது அனுபவத்தில் கண்ட உண்மை. இதற்குக் காரணம் ஒரே மூலிகை பல நோய்களைக் குணப்படுத்தும் செய்கைகளை பெற்றிருப்பதால்தான் சித்த மருந்துகள் எடுத்துக் கொள்ளும்போது கைகால்வலி, உணர்ச்சி குறைதல், தோல் நோய், மலச்சிக்கல், உடற்பருமன் போன்ற தொந்தரவுகள் தானாகவே மறைந்து விடும்.

நி.தர்ஷனோதயன்
சித்தமருத்துவ மாணவன்.

அடுத்து எந்த வகையான உணவுகளை உண்ணலாம்?

கிழங்கு வகைகள் தவிர எல்லா காய்கறிகளையும் அதிக அளவில் உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். குறிப்பாகக் கீரையை வாரம் நான்கு ஐந்து நாள்களாவது சாப்பிட வேண்டும். அதிக இனிப்பில்லாத பழங்களை ருசிக்கலாம். மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் எப்போதாவது கொஞ்சம் எடுத்துக்கொள்வதில் தவறில்லை. குரக்கன் பிட்டு, குரக்கன் களி, குரக்கன் றொட்டி, குரக்கன் கூழ், சிறுகுறிஞ்சாவறை, பயறு வகைகள், குழம்பு மீன், அவல் சப்பிடலாம். கறிவேப்பிலை பொடியை கறிகளில் சேர்த்தல் நல்லது.

எப்போதும் வயிறு நிரைய உணவுக்கூடாது. மூன்று வேளை மிதமான வழக்கமான உணவுகளை உண்ணலாம். எல்லா உறுப்புக்களும் சுறுசுறுப்பாக இயங்கும் விதத்தில் நடை பயிற்சியை தினமும் ஒருமணி நேரம் மேற்கொள்ளலாம். யோகமுத்ரா, தனுராசனம், திரிகோணாசனம், சர்வாங்காசனம், மச்சாசனம் போன்ற ஆசனங்களை செய்துவந்தால் உடல் வலிமையும், மனவலிமையும் பெற்று எந்தவித துன்ப துயரங்கள் இன்றி மகிழ்ச்சியாக வாழலாம். சித்தமருத்துவம் வலியுறுத்தும் 'உணவே மருந்து' தத்துவமும் அதுவேயாகும்.

தமிழீழத் தேசியப் பூ குறித்து

மேற்குலக ஊடகங்களின் பாரபட்சமான கருத்துக்கள்

தமிழீழத் தேசியப் பூவாக கார்த்திகைப்பூ அங்கீகரிக்கப்பட்டுள்ளமை குறித்து மேற்குலக ஊடகங்கள் சில விஷமத்தனமான கருத்துக்களை வெளியிட்டுவருகின்றன.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் மலரும் கார்த்திகைப்பூ தமிழீழத் தேசியப் பூவாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் விடுதலைப் புலிகளால அங்கீகரிக்கப்பட்டது.

இதுகுறித்து மேற்குலக ஊடகங்கள் சில ஒருதலைப்பட்சமான விமர்சனங்களை வெளியிட்டுவருகின்றன.

கார்த்திகைப் பூ ஓர் ஆளைக் கொலலக்கூடிய நஞ்சுத்தன்மை கொண்டது என்றும் -

இத்தகைய பூமரத்தை வீடுகளில் வளர்க்குமாறு விடுதலைப புலிகள் தமிழ் மக்களைக கட்டாயப்படுத்துகின்றனர் என்றும் -

பி.பி.ஸி. செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கு ஒருபடி மேலே போயுள்ள ஏ.எவ்.பி. செய்திநிறுவனம் கார்த்திகைப் பூமரத்தின் கிளைகள் தூக்கிட்டு தற்கொலைசெய்து கொள்ளப் பயன்படுகின்றன என்றும் -

சயனைட் குப்பிகளை கழுத்தில் சுமந்தபடி தற்கொலைத் தாக்குதல்களை நடத்தும் கரும்புலிகளை கார்த்திகைப்பூ மரம் நினைவூட்டுவதாகவும் - செய்தி வெளியிட்டுள்ளது.

'வாஷிங்டன் ரைம்ஸ்', 'த எக்கொனமிஸ்ட்' போன்ற பத்திரிகைகளும் இத்தகைய பக்கச்சார்பான செய்திகளை வெளியிட்டுள்ளன.

வீடுகளில் வளர்க்கப்படும் மலர்கள் பலவும் விஷத்தன்மை கொண்டவை என்று விஞ்ஞானரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், கார்த்திகைப் பூ மட்டுமே உலகில் நஞ்சுத் தன்மை கொண்ட மலர் என்பது போன்று இந்த மேற்குலக ஊடகங்கள் விஷமத்தனமாக விமர்சித்து வருகின்றன.

இதேவேளை -

பிரான்ஸின் புகழ் பெற்ற ஜரிஷ் பூக்கள், ஹொலண்ட் நாட்டின் தேசியப் பூவான 'டுலிப்பு' போன்றவை நஞ்சுத் தன்மை கொண்ட மலர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

பாடசாலை இடை விலகிய மாணவர் பற்றி ஆராய்வதற்கான விசேட கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.21

குடாநாட்டில் போரினால் பாதிப்புற்று பாடசாலையிலிருந்து இடைவிலகி யுள்ள மாணவர்கள், சிறுவர்களை மீண்டும் பாடசாலையில் இணைப்பது அல்லது அவர்களுக்கான வேலைத் திட்டம் ஒன்றை அமைத்துக்கொடுப்பது தொடர்பான கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். யுனிசெவ் அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் யுத்தத்தினால் அவயவங்களை இழந்த மாணவர்கள், வறுமை காரணமாக பாடசாலைப் படிப்பை இடைநிறுத்தியுள்ள மாணவர்கள் தொடர்பாக அவர்களுடைய பெற்றோருடன் கலந்துரையாடி மாற்றுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட வுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

போரினால் அவயவங்களை இழந்த மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களிடம் உள்ள தாழ்வு மனப்பான்மையைப் போக்கி மீண்டும் அவர்கள் கல்வியைத் தொடர வழி சமைப்பதே இக்கூட்டத்தின் நோக்கம் என இதனைச் செயற்படுத்த வுள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கல்வியினைத் தொடராத மாணவர்களின் குடும்ப நிலை பற்றி அறிந்து அவர்களுக்கான உதவிகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.(ஐ-8-6)

அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 26.ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (8-117)

திரைப்பட வட்டத்தின் காட்சி இனி சனிக்கிழமைகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ். பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக் கழகப் புவியியற்றுறை மண்டபத்தில பிரபல திரைப்பட விமர்சகரான சிதானந்ததாஸ் குப்தாவின் நெறியாள்கையில் உருவான 'அமோதினி' என்னும் வங்கமொழித் திரைப்படம் தமிழ்த் துணைத் தலைப்புகளூடாக வீடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

படக் காட்சியின் இறுதியில் எழுத்தாளர்கள் அ.யேசுராசா, க.சட்டநாதன், விமர்சகர் ஏ.ஜே.கனகரத்தினா ஆகியோரின் நெறிப்படுத்தலின்கீழ் கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளது.

இதுவரை காலமும் ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெற்றுவந்த இந்த வீடியோக் காட்சி இனிவரும் காலங்களில் சனிக்கிழமை தோறும் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.(ஐ-10)

பிரி. கலைஞர்கள் வழங்கும் மௌன நாடக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஏப்.21

இங்கிலாந்திலிருந்து வருகை தந்துள்ள 'த கோல்ட் என் செம்பிள்' என்ற அமைப்பைச் சேர்ந்த கலைஞர்கள் அளிக்கும் சைகை மூலம் பேசும் (Mime) நாடக நிகழ்ச்சி எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. பிரிட்டிஷ் கவுன்சில் ஆதரவில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு அனுமதி இலவசம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலைஞர்கள் நடத்தும் கருத்தரங்குகள் 25ஆம் திகதி முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 1.00 மணிவரையிலும் 26 ஆம் திகதி முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 1.00 மணிவரையிலும் நாவலா மண்டபத்தில் இடம்பெறும். (ப)

சந்தை புனரமைப்பு

குடத்தனை,ஏப்.21

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் முற்றாகச் சேதமடைந்த மருதங்கேணி பொதுச் சந்தை புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியினை பருத்தித்துறை பிரதேச சபை ஒதுக்கியுள்ளது.

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உப அதிபர்
திருமதி சித்திரா இராஜரட்ணம் அவர்களின்
அன்புத் தாயார்

திருமதி அன்னரத்தினம் கந்தையா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் யாழ்ப்பாணம்.
(311[illegible])

கண்ணீர் அஞ்சலி

செல்லையா அழகேஸ்வரசாமி (மாலுசந்தி)

எமது பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராகக் கடமையாற்றும் திரு. அ. ஞானச்சந்திரன் அவர்களின் அன்புத் தந்தையார் செல்லையா அழகேஸ்வரசாமி அவர்களின் மரணச்செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை. (31119)(37-12-16)

பிரதேச செயலரும்,
நலன்புரிச்சங்க உத்தியோகத்தர்களும்
ஊழியர்களும்.

துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் எழுதுநராக கடமை புரியும்
திருமதி சிவசோதி தர்மராஜசிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்

அமரர் சின்னப்பு இரத்தினம்

அவர்கள் 15.04.2004 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்,
பிரதேசசெயலகம்,
உடுவில். (சி34573)(37-12-16)

பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

துயர் பகிர்கின்றோம்

யாழ். பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர்
(குருநகர் மேற்கு ஜே/71)
திரு.சூ.ஞானசேகரம் அவர்களின்
அன்புத் தந்தையார்

செபஸ்தியாம்பிள்ளை சூசையா

அவர்கள் காலமானதையிட்டு ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம். (31116)(12-16-17)

பிரதேச செயலாளரும்
உத்தியோகத்தர்களும்.

மரண அறிவித்தல்

செபஸ்ரியாம்பிள்ளை சூசையா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த செபஸ்ரியாம்பிள்ளை சூசையா அவர்கள் நேற்று (20.04.2004) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை - அந்தோனியாப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் விக்ரோறியாவின் அன்புக் கணவரும் மதுரநாயகம், ஞானசேகரம் (கிராம அலுவலர், குருநகர் மேற்கு J/71) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மேரி வேர்ஜினி (தனராணி), ஜெயகௌரி (சாந்தி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மேரி சிந்துஜா மற்றும் அருணோதயன், சிநதுஜன், மேரி வினோகினி, நிருஜா ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல், இன்று (21.04.2004) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல.26, தண்ணீர்தாங்கி வீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காகப் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சூ. ஞானசேகரம் (மகன்)
(கிராம அலுவலர் குருநகர் மேற்கு - J/71)

26, தண்ணீர்த் தாங்கி வீதி,
குருநகர். (31113)(40-12-16)

விசேட பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I :23.04.2004 பிரிவு II :24.04.2004

Diploma in Microsoft Office
Diploma in Desk Top Publishing

மாணவர்களே இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி உங்கள் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்.

BIT

University of Colombo
School of Computing

இறுதிச் சந்தர்ப்பம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வியாண்டு 2004/2005 இற்குரிய Bachelor of Information Technology பட்டக்கல்விக்கான, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத்திகதி –26. 04. 2004.

"BIT கற்கைநெறிக்குத் தனித்துவம் மிக்க IIS இல் இணைந்து உங்கள் எதிர்காலத்தை வளமாக்குங்கள்"

மேலதிக விபரங்களுக்கு:

Director
IIS
100, Clock Tower Road,
Jaffna

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம்-2004

மேற்படி பொதுக் கூட்டம் இம்மாதம் 25.04.2004 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பெற்றார், ஆசிரியர், பாதுகாவலர், நலன்விரும்பிகள் யாவரும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

செல்வி அ.கனகரத்தினம்.
(அதிபர்)

தம்பசெட்டி வீதி,
பருத்தித்துறை. (C/34569)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28 - 02 - 1957

மறைவு
03 - 05 - 2003

திருமதி திருஞானசோதி குணேந்திரன்

அன்புடன் வந்தெம்மை அரவணைத்து
அண்ணியென்றோர் நாமம் சூடி
இன்முகங்காட்டி இன்சொல் பகிர்ந்து
இத்தனை நாளாய் எம் வீட்டில்
இன்பத்தில் மலராகி துன்பமென்றால்
தாங்கி மடி தந்து நின்றாயே! எம்
அண்ணனைத் தனிமையாக்கிச் சென்றதெங்கே?
ஓராண்டு சென்றாலும் வேகுதே நெஞ்சு!

அன்பு மைத்துனிகள்:
நந்தினி இரவீந்திரன்,
சுகந்தினி சந்திரா,
ஜெயந்தினி ஜீவராசா,
சாந்தினி ஞானசூரியர்.

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு, (31115)(12-16-17)

Jayoda ஜயோதா ජයෝද

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6166156 முதல் 6174096 வரை
சீட்டிழுப்பு இல. 25 திகதி 19-04-2004

வெற்றி எண்கள் 4 4 3 0 2 4 சுப்பர் எண் 13

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,75,49,325/- வெல்லப்படவில்லை

வெற்றி எண்கள்	வெற்றி பெற்றோர்	பரிசுத் தொகை	முழு பரிசுத் தொகை
6 எண்களுடன் சுப்பர் எண்	-	1,75,49,325/-	-
இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள்	-	10,00,000/-	-
இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள்	07	50,000/-	3,50,000/-
இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள்	70	5,000/-	3,50,000/-
இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள்	698	500/-	3,49,000/-
இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள்	6,965	50/-	3,48,250/-
இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண்	69,021	10/-	6,90,210/-
வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள்	05	5,000/-	25,000
வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள்	71	1,000/-	71,000/-
வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள்	698	100/-	69,800/-
வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள்	6,906	20/-	1,38,120/-
மொத்தம்	84,441		23,91,380/-

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 23,91,380/-

இந்த வியாழக்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,77,43,000/-

தொடர் இல. 7143106 க்கு பெற்பட்ட [illegible] டிக்கட்டுக்கள் 2004 ஏப்ரல் 22 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை -
இல. 13, [illegible] கொழும்பு 1

[illegible]

6172608-6-06
6166529-9-78
6170160-2-62
6174074-4-00
6167392-2-74

சமாதான நூலகம் யாழ்ப்பாணம்

ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவரின் கல்வித் தரத்தை உயர்த்த நடவடிக்கை

வலிகாமம் கல்வி வலயம் மேற்கொண்டுள்ளது

வலி.தெற்கு,ஏப்.21

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த வலிகாமம் கல்வி வலயத்தினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதுதொடர்பாக 11ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் கணித பாடக் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டம் இரண்டாம் தவணை ஆரம்பத்தில் இருந்து பாடசாலைகளில் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் கல்விவலய கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுகுமார் தெரிவித்துள்ளார்.

இப்புதிய செய்ற்றிட்டத்தின் பிரகாரம் பாட அலகுகள் ரீதியாக மாணவர்களின் அடைவு நிலை மதிப்பிடப்பட்டு, அடைவு குறைந்த மாணவர்களுக்கான பரிகார கற்பித்தல் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.

மதிப்பீட்டுப் பரீட்சைகள் கணித பாடம் I,II ஆகிய பகுதிகளுக்குத் தனித்தனியாக நடத்தப்படும். இப் பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் கோட்டக் கல்வி அலுவலகங்கள் ஊடாக பாடசாலைகளுக்கு வழங்கப படும்.

ஏப்ரல் மாத இறுதியில் இருந்து ஜூலை மாத நடுப்பகுதி வரை கணித பாடம் I இற்கான பரீட்சைகளை நடத்தவும், அதற்கான திகதிகளும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர் ஆகிய மாதங்களில் பகுதி I, பகுதி II ஆகியவற்றுக்கான முழுப் பரீட்சைகள் நடைபெறும். இவற்றுக்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப் படும்.

நவம்பர் மாதத்தில் பொதுப் பரீட்சை மாதிரி வினாத்தாள்களைக் கொண்ட பரீட்சையினை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ-8-152)

மனைப்பொருளியல் பாட ஆசிரிய ஆலோசகர்களுக்கான கருத்தரங்கு

பன்னிப்பிட்டியவில் நடைபெறும்

வலி.தெற்கு,ஏப்.21

மனைப்பொருளியல் பாட ஆசிரிய ஆலோசகர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் இம்மாதம் 25ஆம், 26 ஆம், 27ஆம் திகதிகளில் பன்னிப்பிட்டிய சீதா வள நிலையத்தில் நடைபெற உள்ளன.

இவ்வருடத்துக்கான தமிழ்மொழி மூலமான இச்செயலமர்வில் சகல மனைப் பொருளியல்பீட ஆசிரிய ஆலோசகர்களும் கலந்துகொள்ள வேண்டுமென வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பான அறிவுறுத்தல்கள் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வதிவிடப் பயிற்சி செயலமர்வாக நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கலந்து கொள்ளச் செல்லும் ஆசிரிய ஆலோசகர்கள் தத்தமது வலய மட்டத்தில் மனைப் பொருளியல் பாடம் கற்பிக்கின்ற பாடசாலைகள், வகுப்பு ரீதியாக மனைப் பொருளியல் பாடத்தைக் கற்கின்ற மாணவர்களின் (ஆண், பெண்) எண்ணிக்கை, வலயங்களில் உள்ள தேசிய பாடசாலைகளுக்கு மனையியல் பாடம் தொடர்பாக தற் போது வழங்கப்பட்டுள்ள உபகரணங்களின் விவரம், இப்பாடம் தொடர்பாக வலயங்களில இதுவரை அமுல் நடத்தப்பட்ட விசேட செயல் திட்டங்கள் பற்றிய விரிவான அறிக்கை, இப் பாடத்தை கற்பிக்கின்றபோது எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பான அறிக்கை என்பவற்றையும் எடுத்துச் சொல்ல வேண்டுமெனவும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் அறிவித்துள்ளார் (ஐ-8-152)

வலி.மேற்கு நெற்செய்கையாளருக்கு இவ்வாண்டு நல்லின விதை நெல்

பெற்றுக்கொடுக்க கமநல சேவை நிலையம் நடவடிக்கை

வலி.மேற்கு,ஏப்.21

இந்த ஆண்டு பெரும்போக நெற் செய்கைக்கு நல்ல இன விதைநெல் தேவையான வலிகாமம் மேற்குப் பிரதேச விவசாயிகளை தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு கமநல சேவை நிலையபெரும்பாக உத்தியோகஸ்தர் சு.சோதிநாதன் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு பெரும்போக நெற் செய்கையின்போது ஏற்பட்டகடும் வரட்சி காரணமாக வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் நெல் விளைச்சலில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு பெரும்போக நெற்செய்கைக்கு விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு நிலவும் எனத் தெரிகின்றது. இதனைத் தொடர்ந்து கொழும்பில் இருந்து விவசாயகளுக்கு நல்ல இன விதைநெல் கொண்டு வந்து விநியோகிப்பதற்கு கமநல சேவை நிலையங்களினால் ஆரம்பகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏ.ரி-402, ஏ.ரி-353 ஆகிய நெல்லினங்கள் தேவையான வலிகாமம் மேற்குப்பிரதேச விவசாயிகள் தமக்குத் தேவையான விதைநெல்லின் இனத்தையும், தொகையையும், தேவையான காலத்தையும் குறிப்பிட்டு தொல்புரம் கமநலசேவை நிலையத்தில் உடனடியாகப் பதிவுசெய்து கொள்ளுமாறு பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஐ-8-175)

வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

வடமராட்சி,ஏப்.21

அல்வாய் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் நாளை வியாழக்கிழமை நான்கு இடங்களில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்புசி ஏற்றப்படவுள்ளதாக சுகாதாரப் பரிசோதகர் சி.நகுலேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அன்றையதினம் காலை 9மணி முதல் 10 மணிவரை அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலையத்திலும், காலை 10 மணிமுதல் 11மணிவரை அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11 மணி முதல் 12 மணிவரை இன்டர்சிட்டி சனசமூக நிலையத்திலும், நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை மாயக்கை பாரதி சன சமூக நிலையத்திலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படும்.

குறிப்பிட்ட இடங்களையும் சுற்றாடல்களையும் சேர்ந்தோர் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்தினை ஏற்றிக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (-8-173)

மேசன் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஏப்.21

வடக்கு-கிழக்கு மாகாணத் தொழிற் றுறைத் திணைக்களம் 'மிற்சுயி' சிமெந்து நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் மேசன் சிறப்புப் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 26 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 26ஆம் திகதியிலிருந்து 5 நாள்கள் தொடர்ந்து நடைபெறும் இந்தப் பயிற்சி நெறியில் 30 பயிலுநாகள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

உணவு, தங்குமிடவசதிகளுடன் நாளொன்றுக்கு 150 ரூபா ஊக்குவிப்பு படியும் பயிற்சி முடிவில் தகுதிவாய்ந்த சான்றிதழும் வழங்கப்படும்.

6 ஆம் ஆண்டில் தேர்ச்சி அடைந்து இரண்டு வருட தொழிலனுபவம் உள்ளவர்கள் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் இயங்கும் மாவட்ட தொழிற்றுறை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு மாவட்ட அலுவலர் ப.ராகவன் கேட்டுள்ளார். (8-ரி)

வீதி அபிவிருத்தி தொடர்பான சட்டம் விரைவில் கொண்டுவரப்படும்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு,ஏப்.21

வீதி அபிவிருத்தி தொடர்பான சட்டமொன்று விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமரும், நெடுஞ்சாலைகள் அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நெடுஞசாலைகள் அமைச்சில் உத்தியோகபூர்வமாகக் கடமைகளைப் பொறுப்பேற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் சகல வீதி அமைப்புக்களையும் கிரமமான முறையில் பராமரிக்க நடவடிக்கை எடுப்பதற்கென வீதிக் கண்காணிப்பு சபை நியமிக்கப் படும். சுற்றாடலுக்கு பாதகம் விளைவிக்காத வகையில் வீதி அபிவிருத்தித் திட்டத்தை அமுல்செய்வதே நோக்கமாக இருக்கும். நாட்டின் சகல வீதிகளின் பொறுப்பும் அரசைச் சார்ந்ததாகும். கிராம வீதிகளை அபிவிருத்தி செய்வதுடன் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் வீதி அமைப்பை உருவாக்குவதும் எனது நோக்கமாகும்.

இடைநிறுத்தப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் தாமதமின்றி மீண்டும் ஆரம்பிக்கப்படும் - என்றார் பிரதமர்.

(ஐ-8-9-12)

பனை-தென்னை வள கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு நலன்புரித் திட்டம்

வலி.தெற்கு,ஏப்.21

வலிகாமம் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கொத்தணி அதன் கீழ் உள்ள ஆறு சங்கங்களில பணியாற்றிவரும் பணியாளர்களுக்கான நலன்புரித் திட்டம் ஒன்றை இம்மாதத்தில் இருந்து நடைமுறைப்படுத்தி வருவதாக பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

ஆறு கொத்தணிகளிலும் கடமையாற்றிவரும் பணியாளர்களின் இயற்கை மரணங்கள், திடீர் மரணங்கள், விபத்து மரணங்கள், உடல் பாதிப்புக்கள் என்பவற்றுக்கு உரிய இழப்பீட்டுத் தொகைகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளன.

மேற்படி கொத்தணி அலுவலகங்களில் மூன்று வருடங்கள் கடமையாற்றித் தொடர்ந்தும் சேவையில் உள்ள பணியாளர்களுக்கே இவ் வகையான இழப்பீடுகள் வழங்கப் படும் எனவும் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

சேவையில் உள்ள பணியாளர் ஒருவர் இயற்கை மரணம் அடையுமிடத்து 5 ஆயிரம் ரூபா முதல் 10 ஆயிரம் ரூபா வரை இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

விபத்து மரணம் ஏற்படுமிடத்து 20 ஆயிரம் ரூபாவும், உடல் பூரணமாக பாதிப்படையுமிடத்து 20 ஆயிரம் ரூபாவும் இழப்பீடாக வழங்கப் படும் எனவும் - 18 வயது முதல் 60 வயது வரையுடைய பணியாளர்களே இத்திட்டத்தில் ஈடுபடுத்தப்படுவர் என வும் - பொதுமுகாமையாளர் மேலும் தெரிவித்தார். (8-152)

முன்னாள் ஆயரின் நினைவு தினம்

குருநகர்,ஏப்.21

மறைந்த முன்னாள் யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவுத் திருப் பலியும் இரங்கற் கூட்டமும் எதிர் வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்ஆயர் மேதகு தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மறைந்த முனனாள் ஆயர் நினைவு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்படும்.(8-51)

சித்தாந்த பண்டிதர் பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.21

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் சித்தாந்த பண்டிதர் பட்டமளிப்பு விழா அடுத்த மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

கடந்த வருடம் நடத்தப்பட்ட சைவ சித்தாந்த பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தோருக்குப் பட்டம் வழங்கப்படும். (ஐ-8-173)

சமயச் சொற்பொழிவு

வடமராட்சி,ஏப்.21

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவக் கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேலு பெரியபுராணம் என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை சமூகஜோதி கா.கணேசதாசன் நிகழ்த்துவார். (-8-173)

ஐ.தே.கவின் பொதுச்செயலராக இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

கொழும்பு, ஏப்.21

நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றங்களை மேற்கொள்ள அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

இவ்வாறு சிங்களப் பத்திரிகைச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதற்கமைய, ஸ்ரீகோத்தாவில் இருந்து கிடைத்துள்ள தகவல்களின் படி கட்சியின் பொதுச்செயலாளர் பதவிக்கு இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் நியமனம் செய்யப்படவுள்ளார் என்று தெரியவருகின்றது.

முன்னைய அரசின் தகவல் ஊடகத்துறை அமைச்சராக இருந்துள்ள இம்தியாஸ், கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை.

இதற்கிடையில் -

ஐ.தே.கட்சியினால் புதிதாக உருவாக்கப்படவுள்ள தேசிய அமைப்பாளர் பதவிக்கு எஸ். பி.திஸாநாயக்க நியமனம் செய்யப்படவுள்ளார். (ஐ-8)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்ட உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் 17 வயதுப் பிரிவினரைப் படத்தில் காணலாம். (ஐ-5)

யாழ். மாவட்ட எல்லே சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி சம்பியன்

செயலகங்களுக்கிடையே நடத்தப்பட்ட எல்லே சுற்றுப் போட்டிகளில் ஆண்கள், பெண்கள் ஆகிய இருபிரிவுகளிலும் பருத்தித்துறை பிரதேச செயலக அணிகள் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்த இருபிரிவுகளுக்குமான இறுதியாட்டங்களில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும், யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இவ்வாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி தனது முதல் இன்னிஸ்ஸில் 3 ஓட்டங்களையும், யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி 2 ஓட்டங்களையும் பெற்றன

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் பருத்தித்துறை அணி ஓர் ஓட்டத்தையும் யாழ். அணி இரண்டு ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டன.

இதனால் இரு அணிகளும் தலா நான்கு ஓட்டங்களைப் பெற்று சமநிலையில் காணப்பட்டன.

இறுதியில் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக மேலும் 15பந்துகள் அடிப்பதற்கு இரு அணிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டன.

15 பந்துகளையும் யாழ். பிரதேச செயலக அணியினர் பயன்படுத்தி இரண்டு ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டனர்.

பருத்தித்துறை பிரதேச செயலக அணியினர் ஏழு பந்துகளைப் பயன்படுத்திய நிலையில் மூன்று ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதன் மூலம் இவ்வாண்டுக்கான சம்பியன் பட்டத்தைத் தட்டிக்கொண்டனர்.

ஆட்ட முடிவில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியினர் ஏழுக்கு ஆறு என்ற ஓட்டங்களினால் யாழ் பிரதேச செயலக அணியினரை வெற்றி கொண்டனர்.

அடுத்து நடைபெற்ற பெண்கள் பிரிவிற்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும், தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியும் மோதின. இதில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி 5:2 என்ற ஓட்டங்கள் அடிப்படையில் வென்று இவ்வாண்டுக்கான சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.(ஐ-5-86)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கரபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 15 வயதுப் பிரிவில் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்ட உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அணியினரைப் படத்தில் காணலாம். (ஐ-5)

தொய்பிகல காட்டுப் பகுதியிலிருந்து கருணா எவ்வாறு தரத்தயட்டார்?

பிரதேசவாதத்தை முன் வைத்துப் புலிகள் இயக்கத்துடன் முரண பட்டு எதிர் நடவடிக்கைகளால் ஈடுபட்டிருந்த கருணா மீது புலிகளின் சிறப்புப் படை அணிகள் மேற்கொண்ட இராணுவ உளவியல் தாக்குதல்களை விளக்கி ஆங்கில நாளேடொன்றில் பத்திரிகை யாளர் 'தராக்கி' எழுதியுள்ள கட்டுரையொன்றிலிருந்து சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

கருணாவின் விஸ்தாரமான பேடிக் கட்டுரைகளுடன் 'ஐலன்ட்' பத்திரிகையின் பெரியவெள்ளி விசேட பதிப்பு அச்சாகி வெளிவந்துகொண்டிருந்த அதேவேளை வெருகல் ஆற்றின் வடகரையின் அப்பாலிருந்து 120 எம்எம் மோட்டார் பீரங்கிகள் வாகரையின் வடபகுதியில் நிலைகொண்டிருந்த கருணாவின் எல்லா நிலைகள் மீதும் குண்டுமாரி பொழியத் தொடங்கிவிட்டன.

இந்தக் குண்டுமாரியின் நோக்கம் கொல்லுவது அல்ல. அதிர்ச்சி, அச்சம் கொள்ளச் செய்வதுடன் தற்காப்பிலீடுபட்டிருந்தவர்களை நிலை தடுமாறச் செய்வதுமாகும். மோட்டார் ஷெல் குண்டுகள் மழையாகப் பொழியப்பட்டுக் கொண்டிருந்த அதேவேளை கருணாவின் மூத்தசகோதரர் றெஜியின் கட்டுப்பாட்டிலிருந்த முழுக்கட்டளைப் பிரதேசமும் வீழ்ச்சியடைந்து விட்டது. வாகரைப் பகுதியின் பாதுகாப்பு முழுமையும் றெஜியின் ஆதிக்கத்திலேயே இருந்தது. அவை முழுமையும் புலிகளின் விசேட படையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

கதிரவெளியில் தமது தற்காலிக வசிப்பிடத்தில் அப்போது றெஜி இருந்துள்ளார். குண்டுவீச்சும், பேரிரைச்சலும் றெஜியை நிலை கொள்ளச் செய்துவிட்டதால் அவர் அங்கிருந்து ஓட்டம் பிடித்தார். வினோதன், விசாலகன் - 2, அன்பரசி ஆகியவர்களின் தற்காப்பு அரண்கள் யாவும் ஓசை இழந்து அமைதியாகிவிட்டிருந்தமை அவருக்கு மேலும் பயத்தை விளைவித்திருக்கவேண்டும்.

இந்தத் தற்காப்பு அரண்களையெல்லாம் அதிரடித் தாக்குதல்கள் மூலம் கைப்பற்றிய புலிகளின் சிறப்புப் படையணிகள் குண்டுமாரி ஓயுமுன்பே தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டனர் அன்பரசி பெண்கள் படையணியைச் சேர்ந்த சாவித்திரி, வினோதன் அணியைச் சேர்ந்த பாரதிராஜ் ஆகிய தளபதிகள் கடுமையான காயங்களுக்குள்ளாகியிருந்தார்கள். போர்முனைக்கு அப்பால் வாகனம் ஒன்றில் போய்க்கொண்டிருந்த ஜெயம், சிறப்புப்படையணிகளால் பதுங்கியிருந்து தாக்கப்பட்டார். கதிரவெளிப் பகுதியில் கருணா உருவாக்கி நிறுத்தியிருந்த கடற்புலிப் பிரிவின் தலைவர் இவர்.

ஒலிபெருக்கி அறிவிப்பு

இதேவேளை - ஜயசிக்குறு படையெடுப்பின் போது மிகஉக்கிரமாகவும் பயங்கரமாகவும் போரிட்டு பெயர் பெற்றிருக்கும் புலிகளின் விசேட படையணியொன்று வாகரையின் வடபகுதிக்குள் வெருகல் ஆற்றைக்கடந்து நகர்ந்தது. அன்று காலை விடிவதற்குள் கருணாவின் படைகள், ஜெயந்தன் படையணியால் ஒரு பெட்டிபோன்ற அமைப்புக்குள் மடக்கப்பட்டுவிட்டன. இதேசமயம், மட்டக்களப்பில் கருணாவின் நடவடிக்கைகளை எதிர்த்து, பின்னர் வன்னிக்கு வாபஸாகியிருந்த அரசியல் பிரிவைச் சேர்ந்தவர்கள்

சனிக்கிழமையன்று மடக்கப்பட்டிருந்த பகுதிக்குள் ஒலிபெருக்கிகளுடன் நுழைந்து, கருணாவின் படைகளை ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடும்படி அறிவித்தல் விடுத்தனர். அன்று பகல் ஆவதற்கு முன் 300பேர் ஆயுதங்களுடன் சரணடைந்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கைகள் யாவற்றுக்கும் முழுமையான பொறுப்புத் தளபதியாக இருந்தவர் கருணாவின் முன்னாள் பிரதித் தளபதி தம்பி ராஜா ரமேஷ் ஆவார்(அவர் கடந்த வாரம்தான் புலிகளால் கேணல் நிலைகுப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்).

இதற்கிடையில் அதிரடியாக முன்னேறிக்கொண்டிருந்த புலிப்படைகளைத் தடுத்துநிறுத்துவதற்கென ஜிம்கெலி தாத்தா, ராபர்ட் ஆகியவர்களின் தலைமையில் மேலதிகப் படைகளை அனுப்பிவைத்தார் கருணா.

பாதைகள் துண்டிப்பு

சனிக்கிழமை இரவு வாகரையில் கருணாவின் அணிகளுக்குப் பொருள்கள் எடுத்துச்செல்லும் வழிகளை புலிகளின் சிறப்புப் படையணிகள் ஊடறுத்துப் புகுந்து துண்டித்துவிட்டன. அன்று பகல் புலிகளின் உளவியல் நடவடிக்கைப் பிரிவினர் பரஸ்பர அழிவைத்தரும் இந்தப்போரின் பயனற்ற தன்மை குறித்து பேச்சுக்களைத், தொடங்கியிருந்தார்கள்.

இந்த நிலையில் றெஜி, ராபர்ட் ஆகியவர்களின் தலைமையில் ஆரம்பமான இரண்டு எதிர்தாக்குதல்களும் புலிகளின் போர்த்தந்திரங்களுக்கும் உளவியல் செயற்பாடுகளுக்கும் ஈடுகொடுக்கமுடியாமல் பிசுபிசுத்துப்போய்விட்டன. ஞாயிறு காலையில் கருணாவின் படைகள் சின்னாபின்னப்பட்டு வாகரையை விட்டு அகன்றன. தரவை வடமுனைப் பகுதிக்கு (தொப்பிகல) பின்வாங்கின.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் A-11 பகுதியில் மேலதிக படைகளை நகர்த்தப்போவதாக அறிவித்தது.

இந்த நடவடிக்கை கருணாவைக் காப்பாற்றும் முயற்சியாக இருக்கலாம் என புலிகள் கருதினார்கள் என்று கொள்ளலாம். கருணாவின் படைகளைத் துரத்திச் செல்லும் விதத்தில் பெருமளவில் போராளிகளைப் புலிகள் இப்பகுதி ஊடாக நகர்த்துவதைத் தடுப்பதே இதன் நோக்கமாக இருந்திருக்கலாம். இதேவேளை, கருணாவின் கலகக் காலத்தில் சிகிச்சைக்காக வெளிநாடு சென்றிருந்த அம்பாறை மாவட்ட ராணுவப்பிரிவுத் தளபதி ஜனார்த்தன் தலைமையிலான படைப்பிரிவு மட்டக்களப்புக்குச் சுமார் 70 கி.மீ.தொலைவில் திருக்கோயிலுக்கருகில் ஓர் இடத்தில் ஞாயிறு இரவில் வந்துசேர்ந்தது. உளவியல் செயற்பாட்டுப் பிரிவொன்றும் அம்பாறை அரசியல் பிரிவுத் தலைவர் குயிலின்பனும் ஜனார்த்தனுடன் இணைந்துகொண்டனர்.

இவர்கள் கஞ்சிக்குடிச்சான் ஆறு பகுதியில் அமைந்திருந்த விசாலமான புலிகளின் தளத்துடன் இணைப்பை ஏற்படுத்திக்கொண்டனர்.

இந்த நிலையில், 24மணி நேரத்துக்குள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விவாதங்கள், பேச்சுக்கள், எதிர்வாதங்கள் கனிவான உரையாடல்கள் மற்றும் நம்பிக்கையூட்டும் மடல்கள் காரணமாக அப்பகுதியிலிருந்த பிரிவுகளின் தலைவர்கள், புலிகளுடன் மீண்டும் இணைவதற்கு ஒப்புக் கொண்டனர். ஒரு வேட்டுக் கூட தீர்க்கப்படவில்லை. அது முற்றிலும் ஒரு உளவியல் போர் வெற்றியாகும்.

அவரது குழப்பம்

பெரிய வெள்ளிக்கிழமைக்கு முன்பதாக வாகரைப்பகுதியில் தாக்குதல்களை ஆரம்பித்திருந்த கருணாவின் முன்னாள் இராணுவ புலனாய்வுப் பிரிவு தலைவர் ரமணனின் தலைமையிலான படையணி அப்பகுதியின் எல்லாப் பிரிவுகளோடும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டுவிட்டது. அதேவேளை அம்பாறையின் தமிழ்ப் பிரதேசங்களும் வாகரைப் பகுதியும் வீழ்ச்சியடைந்து கொண்டிருப்பது குறித்து கருணா குழப்பமடையத் தொடங்கியிருந்தார்.

அதேவேளை வடமுனை தரவை (தொப்பிகல)ப்பகுதி காடுகளில் தாம் பத்திரமாக இருப்பதாகவே மனிதர் நினைத்துக் கொண்டிருந்தார்.

ஞாயிறு இரவு கருணாவின் இரகசிய முகாம் அமைந்திருந்த மேற்கு - வடமேற்கு பகுதியின் மிக உட்புறமாக புலிகளின் சிறப்புப்படையணிகளின் இரண்டு மூர்க்கமான தாக்குதல்கள் இடம்பெற்றன. இந்த முகாமிலிருந்தே கருணா தனது எதிர்த்தாக்குதல்களுக்கான திட்டங்களைத் தட்டிக்கொண்டிருந்தார். இந்தத் தாக்குதல்கள் விட்டோடி தளபதியையும் அவரது சகாக்களையும் கதிகலங்கவைத்துவிட்டன. இந்தத் தாக்குதல் மிகத் தெளிவாக தெரிவுசெய்யப்பட்டும் முன் உணர்வோடும் எடுக்கப்பட்டிருந்தவிதம் கருணாவுக்கு மிகுந்த மனத் தளர்ச்சியைக் கொடுத்திருக்கவேண்டும். தனது மிகப் பாதுகாப்பான பகுதிகளுக்குள்ளேயே புலிகளின் சிறப்புப்படைகள் ஊடுருவியிருபபதானது கருணாவால் எந்தவிதத்திலும் புரிந்துகொள்ள முடியாதிருந்தது. அவர்கள் மிகவேகமாக முன்னேறிக்கொண்டிருந்தார்கள். இவைகள் பற்றி ஆராயவோ, விளங்கிக் கொள்ளவோ கருணாவுக்கு நேரமிருக்கவில்லை.

சிறப்புப் படைகளால் உளவியல் செயற்பாடுகளுடன் தரவை வடமுனைக் காட்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது, அப்பகுதியில் கருணாவுக்கு இருந்த பிடிகள் யாவற்றையும் தளர்த்திவிட்டன. எது நேர்ந்தாலும் தம்முடன் நின்று பிடிப்பார்கள் என்று எதிர்பார்த்தது வீண் கனவாயிற்று.

கருணா வெளியேற்றம்

ஞாயிறு இரவு கருணா மட்டக்களப்பை விட்டு வெளியேறிவிட்டார். நெருங்கிய நண்பர்களும் தளபதிகளுமாக சுமார் 12பேர் அவருடன் சென்றனர். கிழக்கிலங்கையில் பெண்கள் போர் அணியின் தளபதியாகவிருந்த நிலாவினியும் அவர்களில் ஒருவர்.

கருணாவின் குறுகிய கால எதிர்ப்பானது இலங்கையின் அரசியல் ராணுவ மட்டங்களில் மேலும் உயர்வான அந்தஸ்தை தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பெற்றுத்தந்துள்ளது.

"எமது தலைவரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக இரத்தம் சிந்தாமலே கருணாவை தனிமைப்படுத்துவதற்கு நாம் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தோம்" என அண்மையில் கேணல் தரத்துக்கு பதவி உயர்வு பெற்றுள்ள ரமேஷ் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்துடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டதின் பின்னர் புலிகள் ராணுவத் தரத்திலும், அதன் பல்வேறு அம்சங்களிலும் எவ்வளவுதூரம் தம்மை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை கருணாவை அவர்கள் மடக்கிய விதம் குறைந்த அளவில்தான் வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகள் புலிகளின் சிறப்புப் படையணிகளும் உளவியல் பிரிவுகளும் எவ்வளவு கச்சிதமாகக் கட்டி வளர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை அனுபவமிக்க சிரேஷ்ட தளபதியான கருணாவால் கூட புரிந்துகொள்ள முடியாதிருந்துள்ளது.

இனப்பூசலுக்கு நியாயமான தீர்வொன்றைச் காண்பதற்குப் பதிலாக தமிழர் தரப்பிலுள்ள நொண்டிக்குதிரைகளைச் சார்ந்து நிற்பதே சிங்கள அரசியல் தலைமைகளின் திருத்த முடியாத நிலைப்பாடாக இருந்துவரும் அதேவேளை தனக்கே உரிய அமைதியான முறையில் எவரும் சீண்டிவிட முடியாதபடி பிரபாகரன் தனது "வெடிமருந்துகளை" உலர்த்தியே வைத்துக் கொண்டிருக்கிறார்.

(ப)

பழகிய முகம்! புதிய நிறுவனம்

"சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்"

✪ புதிதாக பல வர்ணங்களில் வடிவமைக்கப்பட்ட கொழும்பு, உள்ளூர் நினைவு மலர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்

✪ சகல ஓவ்செற் பிறிண்டிங் வேலைகளிற்கும் நாடுங்கள்:

"சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்"

இல.183, பலாலி வீதி, கோண்டாவில்.

(31105) (24-21-13-18)

இலவச ஆங்கில வகுப்பு

ஒரு மணிநேரத்தில் ஆங்கிலத்தில் கதைக்கலாம்.

சந்தேகம் வேண்டாம். 2. 3 வயதில் ஆங்கிலத்தை சரளமாகக் கதைக்கும் ஆங்கிலக் குழந்தைகளுக்கு இலக்கணம் தெரியாது. 200. 300 சொற்கள் மட்டுமே தெரியும் அதைவிட அதிகமான சொற்கள் உங்களுக்குத் தெரியும். உங்களால் ஆங்கிலத்தைக் கதைக்க முடியும்.

எமது ஒரு மணி நேர வகுப்பு மூலம் இதுவரை ஆயிரக் கணக்கானோர் ஆங்கிலத்தை சரளமாக கதைக்கிறார்கள்.

☐ மாணவர்கள் (தரம் 9 இற்கு மேல்) ☐ பெற்றோர்
☐ உயர்கல்வி மாணவர்கள் ☐ கணினி மாணவர்கள்
☐ பல்கலைக்கழக மாணவர்கள் ☐ பட்டதாரிகள்
☐ ஆசிரியர்கள் ☐ அலுவலர்கள்

அனைவருக்குமான புதிய முறையிலான இலவச ஆங்கில வகுப்பு

இடம் :- யாழ்.மத்திய கல்லூரி.
காலம் - 24.04.2004 சனிக்கிழமை
காலை 8.30 முதல் மாலை 6.30 வரை ஒவ்வொரு மணி நேரமும் வகுப்புகள்.

அனுமதி இலவசம். கலந்துகொள்ளும் அனைவருக்கும் கற்கைநெறி வழிகாட்டியும் சான்றிழும் இலவசம்.

PSALM INSTITUTE OF ENGINEERING AND TECHNOLOGY
22 1/4, Galle Road Dehiwala 011- 5559222

(C-34565) (10-21-13-18)

உங்கள் நினைவழியாத

எமது வீர வணக்கங்கள்

அன்னை மனம் மகிழ 25 - 07 - 1975
அகவை மண்ணுக்காய் 21 - 10 - 2000

கப்டன் வேலவன் / மலரவன்
(இரத்தினசிங்கம் நாதகீபன்)

அன்னை மனம் மகிழ 25 - 09 - 1980
அகவை மண்ணுக்காய் 21 - 04 - 2001

மேஜர் மஞ்சரி
(திருச்செல்வம் சிவச்செல்வி)

தங்கை மேஜர் மஞ்சரியின் மூன்றாம் ஆண்டு வீரவணக்கத்தின் போது அண்ணா கப்டன் வேலவன்/மலரவனுக்கும் தமிழினம் போற்றும் அனைத்து மாவீரர்களுக்கும் எமது நினைவழிய வீரவணக்கங்கள்.

17/34, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: இ.சுஜீவன் (அண்ணா)

கப்டன் வேலவன் குடும்பத்தினர் (பெரியப்பா, பெரியம்மா).

(31104)(24-21-13-18)

புதிய அரசின் பேச்சுக்கான....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி) ஆணை கேட்டிருந்தனர். சிங்கள வாக்காளர் ரணிலை ஆட்சிபீடம் ஏற்ற மறுத்துவிட்டனர்.

ஆனால், சந்திரிகா - ஜே.வி.பி. கூட்டணியினர் சிங்கள மேலாதிக்கத்துடன் கூடிய ஒரு சமாதான பேச்சிற்கான கொள்கையை முன்வைத்தனர். சிங்கள வாக்காளர்கள் அதற்கே ஆணை வழங்கினர். தென்னிலங்கைத தமிழர்கள் கணிசமாக வாழ்ந்து வரும் தேர்தல் மாவட்டங்களில் ரணிலின் கட்சியினர் வெற்றிவாகை சூடியுள்ளனர்; தனிச்சிங்கள தேர்தல் மாவட்டங்களில் தோற்றுள்ளனர்.

ரணிலின் சமாதான முயற்சிகளிற்கு தமிழரின் ஆதரவும் சிங்களவர்களின் எதிர்ப்பும் உள்ளதை இத்தேர்தல் முடிவு காட்டுகின்றது.

நீண்ட போரும், அது கொடுத்த அரசியல் விழிப்புணர்வும் சிங்கள மக்கள் மத்தியில் பாரிய மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன என்ற பொதுவான அபிப்பிராயத்தை இந்தத தேர்தல் முடிவு பொய்யாக்கியுள்ளது.

சிங்கள மக்களது இந்த இனவாத மனநிலை சர்வதேச சமூகத்தை ஆச்சரியப்படுத்தியிருக்கும். ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இது பரீட்சையமான ஒன்றாகும்.

சிங்களத்தில் ஆட்சி அமைத்துள்ள புதிய கூட்டணியின் வெற்றி தமிழினத்திற்கு ஒரு சவாலாகவே விளங்கப் போகிறது. புதிய கூட்டணி அரசு விரும்பும் சமாதானப் பேச்சுக்களின் திட்டங்கள் புலிகள் இயக்கத்தின் அரசியல் நிலைப்பாட்டிற்கு முரணாகவேயுள்ளன.

புலிகள் இயக்கத்தின் சமாதான அரசியல் வெளிப்படையாகவும், சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் உள்ளது.

தேர்தலில் கிடைத்த மக்கள் ஆணையும் புலிகளின் அரசியல் பலத்தை அதிகப்படுத்தியுள்ளது. சிங்களவரின் இனவாத ஆசைகள் இராணுவ ரீதியாகவும் சரி அரசியல் ரீதியாகவும் சரி நிறைவேற்றப்பட முடியாத அளவுக்கு புலிகள் இயக்கம் இராணுவரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பலமாக உள்ளது.

- என்று தெரிவிக்கப்பட்டுளது.

தவறிவிட்டது

குப்பிளானைச் சேர்ந்த திருமதி மணிமேகலை பொன்னம்பலம் என்பவருடைய யாழ்அரசினர் வைத்தியசாலையிலிருந்து இருமுறை டிஸ் சார்ஜ் பண்ணப்பட்ட டிஸ்சார்ஜ் காட், கிளினிக் அனுமதிப்பத்திரம், டயறி முதலிய முக்கிய வைத்திய ஆவணங்களும வேறு சில முக்கிய ஆவணங்களும் படங்களும் அடங்கிய பை ஒன்று கடந்த 14.04.2004 புதன் கிழமை பஸ் பிரயாணத்தின்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

ஆர்.தங்கேஸ்வரன்,
கலைமகள் வீதி,நல்லூர் வடக்கு.
(சி-34576)(37) யாழ்ப்பாணம்.

அழகிய ஆடைகள் தைக்க வேண்டுமா?
மணப்பெண் அலங்காரம் செய்ய வேண்டும்?

சாறி பிளவுஸ் (Indian Cutting), சல்வார், (Normal & Body Shape) உட்பட அனைத்து ஆடைகளும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண் அலங்காரம் (Facials), சடைநாகம், Bouquchat ஓடர் களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு
ராதிகா
95/14, ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை.
(31117)(40)

கண்ணீர் அஞ்சலி

இளவாலை யா/புனித என்றியரசர் கல்லூரியின்
ஆசிரியரான திரு.சு.இருதயநாதன்
அவர்களின் தந்தையார்

செ.சூசைப்பிள்ளை

அவர்கள் இறைபதமடைந்தமையையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

புனித என்றியரசர் குடும்பம்,
இளவாலை.

(சி-334576)(37-13-16-36)

VACANCY
POST OF LIAISON OFFICER

The Bergh of Foundation for Conflict Studies Sri Lanka Office was established in 2001 as a branch office of the Berghof Foundation in Germany. The work of the Berghof Foundation in Sri Lanka is funded by the Sw'ss Federal Department for Foreign Affairs and the German Federal Ministry for Econ⊃mic Cooperation and Development (BMZ) through the German Technical Cooperation (GTZ). The objective of the Foundation is to contribute to a just and sustainable peace in Sri Lanka by strengthcning and ccmplementin, existing structures and capacities for research, training and dialogue within the country. This objective is to be achieved through workshops, conferences, trainings, scholarships etc. in collaboration with local partners.
The main target group of the Foundation comprises decision makers, their advisors, politicians and political practitioners and influentials from all parties and sections of the civil society.
As the Foundation strives to conduct its activities also in the NorthEast of Sri Lanka, we require an efficient and dynamic person, ideally a social scientist to take up appointment as Liaison Officer for a half-time position.

The candidate for this position is expected to possess the following qualifications
- The ability to work independently, and have excellent communica tion, organizational, writing skills
- Familiarity with the political and societal system of Sri Lanka
- Proficiency in English and Tamil
- Support the work of the foundation through surveys, to ascertain the needs of partner organizations, to assist in the regular networking with influentials in Jaffna and Vanni

Please forward your complete resume with contact details to reach us within three days (24. 04. 2004) of this advertisement to the following address.
The Director
Berghof Foundation for Conflict Studies, SL Office William Harway Building
No 17. Kandy Road Jaffna
Telephone: 0777-273531 or 021-222-5719
E-mail : mariberghof @ Yahoo.com (31120)(36-14-16)

மரண அறிவித்தல்

திருமதி விமலாதேவி நடராசா

(நீர்வேலி வடக்கு, காளிகோயிலடி)

தம்பாலை, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கு, காளிகோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி நடராசா நேற்று (20.04.2004)செவ்வாய்க்கிழமை காலமானார்

அன்னார் தம்பாலை மயில்வாகனம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் நீர்வேலி வடக்கு, காளிகோவிலடி கணபதிப்பிள்ளை நடராசா ஆச்சாரியின அன்பு மனைவியும் மாலினி (சுவிஸ்), வனஜா (பிரதேச சபை, சுன்னாகம்) உஷானி (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலசிங்கம் (சுவிஸ்) அவர்களின் அன்பு மாமியாரும் சர்ஜனா (சுவிஸ்) அவர்களின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
க.நடராசா ஆச்சாரி
(கணவர்).

(31126)(37-14-16-36)

கைதடிப்பகுதியில் சமயதீட்சை வழங்கும் நிகழ்வு

கைதடி,ஏப்.21

கைதடிப்பகுதியில் சைவ அடியார்களுக்கு சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் நடைபெற உள்ளது. அடியார்கள் இதில் கலந்து கொள்ளலாம் என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

(ஓ-75)

உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.21

தமிழீழ விளையாட்டுத்துறை, வலிகாமம் உதைபந்தாட்ட லீக் என்பவற்றின் அனுசரணையுடன் டயானா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 2.30 மணிக்கு இளவாலை யங்ஹென்றீஸ் வி.க.எதிர் கொக்குவில் பொற்பதி வி.க.

பிற்பகல் 3.45 மணி நாவாந்துறை கலைவாணி வி.க.எதிர் மயிலங்காடு ஸ்ரீமுருகன் வி.க. (ஓ-5)

★ ★ ★

வலிவடக்கு,ஏப்.21

யாழ்மாவட்ட கல்வி வலயப் பாடசாலைகளிடையே இடம்பெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில இடம்பெறவுள்ளது.

இன்றைய போட்டியில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

16 வயதுப்பிரிவு

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயம் எதிர நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

18 வயதுப்பிரிவு

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் சென்பற்றிக்ஸ் கல்லூரி.

(ஓ-86)

கலைவாணி கல்வி நிறுவனம்
மானிப்பாய் வீதி, கோப்பாய்

CHEMISTRY
A/L 2006
(பொது இரசாயனம்)(சனி,ஞாயிறு 4.30-6.30)
A/L 2005
(சேதன இரசாயனம்)
வியாழன்-3.30 p.m. - செவ்வாய்-6.30a.m.
ஆசிரியர்-திரு.K.பவான
குறிப்பு:-O/L DAY CLASS
பிரிவு 11
ஆரம்பம்-26.04.2004(திங்கள் காலை 8.00) (31122)

கொம்பியூட்டர்
பொலிமர்
இறபர் முத்திரை
இலவசம்
ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு:
யசோ,
35, கன்னாதிட்டி வீதி,
(30331) யாழ்ப்பாணம்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
நாகர்ஜுன், பிரபுதேவா நடித்த
அக்னி வர்ஷா
(ஹிந்திப்படம்)
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி சனி ஞாயிறு இரவு 8.45 இற்கு
MBRCRY RISING
(சி34420)(12)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசன்னா, அனு, வடிவேல்
புதிய வெளியீடான நடித்த
காதல் டாட் காம்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(சி34180)(12)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா,
பிரகாஷ்ராஜ்
நடித்த

(சி34517)(22)
கில்லி
(ரீஸ்ஸ்)
10.30.,2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

முன்னாள் அமைச்சர்கள் குறித்து விசாரணை

இரண்டு வருடகாலத்திற்குள் திடீரென கோடீஸ்வரர்களான முன்னாள் அமைசசர்கள் குறித்து லஞ்ச ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதென சிங்கள செய்தி ஊடகமொன்று தெரிவித்தது.

லஞ்ச ஆணைக்குழுவுக்குக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்தே இந்தத் திடீர் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர்கள் தொடர்பாகக் கிடைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் காரியாலயங்களுக்கு நேரில் சென்று தேவையான தகவல்களைத் திரட்டி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

மரண அறிவித்தல்கள்

வைத்திலிங்கம் பூபாலசிங்கம்

(முன்னாள் P.W.D.ஓவசியர்)

கொட்டடி, இலக்கம் 29,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது உரும்பிராய் சிவன் வீதியில் தற்காலிகமாக வசித்தவருமான வைத்திலிங்கம் பூபாலசிங்கம் நேற்று (20.04.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் இராசக்கண்ணு தம்பதிகளின் மூத்த புதல்வனும் இசைஞானவதி (பேபி)யின் அன்புக கணவரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சிந்தாமணி ஆகியோரின் அன்பு மருமகனும் ஜெகதீஸ்வரி, கனகேஸ்வரி, ராஜேஸ்வரி, குணபாலசிங்கம், ஜெயராணி, செல்வராணி, கமலராணி, மோகன், முகுந்தன் மற்றும் கண்ணன் ஆகியோரின் சகோதரரும் புண்ணியவதி, சிவகாமசுந்தரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21.04.2004)புதன்கிழமை பிற்பகல் 3.30மணியளவில் அவரது தற்காலிக முகவரியில் இடம்பெற்று, பூதவுடல் உரும்பிராய் இளங்காடு மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு. (31127)(17-16-14-36)

தகவல்:
இசைஞானவதி(பேபி)
மனைவி.

சிவசுப்பிரமணியம் செல்வலிங்கம்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் அராலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் செல்வலிங்கம் 19-04-2004 அன்று காலை 4.30மணியளவில் மரணம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் - பவளம்மா தம்பதியரின் அன்பு மகனும் சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும் ராஜ்குமார் (பிரான்ஸ்), கஜந்தா, ராஜ்மோகன், மோகன்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் தவராசா, தங்கரத்தினம் (காலஞ்சென்ற) தருமலிங்கம், கமலநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் குணரத்தினம் சிவபாக்கியம் (காலஞ்சென்ற) அவர்களின் மூத்த மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22-04-2004) வியாழக்கிழமை காலை 9.00மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வளுக்கை ஆறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

அராலி.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(31125)(17-16-14-36)

சோமசுந்தரம் தவலிங்கம்

30/2, சீனிவாசகம் வீதி, கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் தவலிங்கம் அவர்கள் நேற்று (20.04.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் சாந்தி, ஜெயந்தி, குருபரன், கௌரி, நித்தியா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் லிங்கம், மோகனதாஸ் அன்ரன், சூரி ஆகியோரின் மாமனாரும் சீவரத்தினம், இரத்தினாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2004) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொட்டடி வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30/2,சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(31123)(37-14-16-36)

ராஜ - ஸ்ரீகாந்தன்

வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பிரபல எழுத்தாளரும், தினகரன பத்திரிகை முன்னாள் பிரதம ஆசிரியருமான ராஜ - ஸ்ரீகாந்தன் நேற்று (20.04.2004) செவ்வாய்க்கிழமை மாரடைப்பினால் கொழும்பில் காலமானார்.

அன்னார் அமரர்களான இராசரத்தினம் - சீவரத்தினம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும் திருமதி ஸ்ரீ.லீலாவதியின் அன்புக் கணவரும் செல்விகளான ஸ்ரீ.அபர்ணா, ஸ்ரீ.அனோஜா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திருமதி ஜீவரேகா லோகநேசன், திருமதி புஷ்பரேகா மகூரமணி, இஸ்ரீதரன், இஸ்ரீகரன் ஆகியோரின் சிரேஷ்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 81/4,விஜயகுமாரதுங்க மாவத்த, கிரிலப்பனையில் நடைபெற்று நாளை வியாழக்கிழமை பிப 3மணிக்கு கிரிலப்பனை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும அறியத்தருகிறோம்.

தகவல்:
81/4, விஜய குமாரதுங்க மு.மகூரமணி (மைத்துனர்)
மாவத்த, கிரிலப்பனை. 'திருரத்தின வாசம்'
T.P.011-2768182 (சி.34577)(37-16-14-36)அல்வாய் தெற்கு, வதிரி.

திருமதி சண்முகம் நாகம்மா

மல்லாசத்தைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் நாகம்மா நேற்று (20.04.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பாலேந்திரன், திருநாவுக்கரசு ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2004) புதன்கிழமை பி.ப.2.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
தி.அனோதன் (சூட்டி)
(பேரன்).

(31124)(37-14-16)

உயிருடன் இருந்த சிசுவை இறந்ததாகக் கருதிய விபரீதம்

யாழ். ஆஸ்பத்திரியில் சம்பவம்

இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கருதிய சிசு உயிர்பிழைத்த சம்பவம நேற்று முன்தினம் மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் இடம் பெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரசவத்துக்காக கர்ப்பினிப் பெண ஒருவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். நேற்றுமுன்தினம் மாலை அப்பெண்ணுக்கு பிரசவவலி ஏற்பட்டது. அவருக்கு 'சிசேரியன்' சத்திரசிகிச்சை மேற் கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை 6.50 மணியளவில் சத்திரசிகிச்சை மூலம் சிசு தாயிடமிருந்து வேறாக்கப்பட்டது. அப்போது சிசு உயிர்த்துடிப்பு அற்ற நிலையில் இருந்தது. சிசுவைப் பரிசோதித்த மருத்துவர்கள் எந்தவொரு துடிப்பையோ அசைவையோ சிசுவில காணமுடியவில்லை. அதனால் சிசு இறந்தேபிறந்தது என்று அவர்கள் கருதினர்.

இதனால், சிசுவிடமிருந்து தமது கவனத்தைத்திருப்பிய மருத்துவர்கள் தாய்க்குச் சிகிச்சையளித்தனர்.

உயிருடன் இருக்கும் ஒரு சிசுவை சத்திரசிகிச்சை அறையில் இருந்து மருத்துவதாதியே எடுத்துச் செல்வார். ஆனால், குறிப்பிட்ட சிசு இறந்ததாகக் கருதப்பட்டதால் ஆஸ்பத்திரி சிற்றூழியர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டது.

அவ்வேளை, இடைவழியில் சிசு அசைவதை அந்த ஊழியர் அவதானித்தார். இதனையடுத்து அதனை குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தில் கையளித்த சிற்றூழியர், நடந்ததைத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து உடனடியாக சிசு அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டது.

ஆனாலும் இச்சிசு நேற்று மதியம் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப் பட்டது. (ஒ-9-ரி)

வங்கியில் வேலை பெற்றுத்தருவதாக யுவதியை ஏமாற்றியோருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஏப்.21

வங்கியில் வேலைவாங்கித் தருவதாகக் கூறி போலியான நியமனக் கடிதத்தை யுவதி ஒருவருக்கு வழங்கிய இருவருக்கு யாழ்.நீதிமன்றம் தலா 5 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்துள்ளது.

புலோலி மத்தி, காந்தியூரைச் சேர்ந்த சதாசிவம் விக்னேஸ்வரன் ,அலவாய், இரத்தினவாசம் என்ற முகவரியைச் சேர்ந்த ஸ்ரீகாந்தராசா சிவசங்கர் ஆகிய இருவரும் இதே இடத்தைச் சேர்ந்த யுவதி ஒருவரிடம் ஒரு தொகைப் பணத்தைப் பெற்று வங்கி ஒன்றில் எழுதுவினைஞர் பதவிக்குரிய போலியான நியமனக்கடிதத்தை வழங்கியுள்ளனர்.

இது தொடர்பாக கடந்த 2002 ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி குறித்த வங்கியின் உதவி பொதுமுகாமையாளர் யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். இது தொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ். நீதி மன்றில் விக்னராஜா முன்னிலையில் நேற்று இடம்பெற்றது. சாட்சிகள் மற்றும் சந்தேக நபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மேலும் சில போலி நியமனக்கடிதங்கள் உட்பட சான்றுப பொருள்களை ஆதாரமாகக் கொண்டு இருவரும் குற்றவாளிகளாக இனம் காணப்பட்டனர்.

விசாரணையின் முடிவில் இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-5)

தமிழ் இனத்தின் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் அரசியல் அபிலாஷைகளை வெல்வதற்கு நாம் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இடைக்கால நிர்வாகத்தின் அவசியம், அதைப் பெறக்கூடிய வகையில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற விடயம் உட்பட்ப பல விடயங்கள் குறித்துப் பேசினோம்.

தேர்தல் வெற்றி குறித்து பெருமகிழ்ச்சியைத் தலைவர் வெளிப்படுத்தினார். நீண்டகாலத்துக்குப் பின் தமிழ் மக்கள் தமது ஒற்றுமையை, பலத்தை நிரூபித்திருக்கிறார்கள். எமது மக்கள் தமது அரசியல் நிலைப்பாட்டை நிரூபித்துள்ளார்கள்.

இதைச்சிங்கள அரசியலும், தலைமைத்துவங்களும், சர்வதேசமும் சரிவர உணர்ந்து கொள்ளவேண்டும். தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்வதை தெற்கு அரசுகள் இன்னமும் தாமதிக்கக்கூடாது என்பதை எல்லோரும் உணரவேண்டும் என்ற கருத்து எமது சந்திப்பில் பலமாக ஒலித்தது.

எல்லோரும் ஒற்றுமையாக - ஒருமித்து - எமது அரசியல் நோக்குகளை முன்னெடுக்கக் கூடிய வகையில் நாங்கள் செயற்பட வேண்டும். அவ்விதமாகச் செயற்படுவதற்கு தமிழீழ விடுலைப் புலிகள் எமக்கு ஒத்துழைப்புத் தருவார்கள் என்ற உறுதி மொழியைத் தலைவர் வழங்கினார் - என்றார் அவர். (க)

22 தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து தனியாகக் கலந்தாலோசனை நடத்தினர்.

இன்று கொழும்பில் கூடி இவ்விடயம் குறித்து விரிவாக ஆராய்வது என்றும் -

நாளை நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவு நடைபெறுவதற்கு முன்னர் மீண்டும் ஒரு தடவை வன்னிக்கு வந்து இது பற்றிப் பேசி முடிவெடுப்பது என்றும் - நேற்றுத் தீர்மானிக்கப்பட்டதாக அறியவந்தது.

இதன்படி, நேற்றிரவு கொழும்புக்கு வந்து சேர்ந்த இந்தப் பிரதிநிதிகளில் ஒரு சிலர் இன்றிரவுக்கு முன்னர் மீண்டும் வன்னிக்குச் சென்று உடனேயே கொழும்புக்குத்திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர் நாளை காலை நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர் தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் அனைவரும் தங்களுக்குள் கூடிப்பேசி சபாநாயகர் தெரிவில் பின்பற்றவேண்டிய பொது உத்தியை உறுதிப்படுத்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

கருணா தரப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றேன். மட்டக்களப்பைப் புலிகள் மீண்டும் தம் வசப்படுத்திய சமயம் கருணா தரப்பில் உயிரிழந்தவர்களையும் மாவீர்களாக அறிவிக்க வேண்டும் விடுதலையை அடைவதற்காகவே அவர்களை அவர்களது பெற்றோர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு அனுப்பி வைத்திருந்தனர். எனவே, அவர்களை மாவீர்களாக அறிவிக்கும் படி தங்களை வேண்டுகிறேன்" - என்று தலைவர் பிரபாகரனிடம் அரியநேந்திரன் தெரிவித்தார்.

ஆனால், அச்சமயம் குறுக்கிட்ட வடபகுதியின் இளம் எம்.பி. ஒருவர், தேசியத் தலைவரிடம் இத்தகைய கோரிக்கையை முன்வைப்பது இழுக்கு என்ற சாரப்படக் கருத்துத் தெரிவித்தார்.

ஆனால், அச்சமயத்தில் குறுக்கிட்ட தலைவர் பிரபாகரன், "மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி என்ற முறையில் இத்தகைய கோரிக்கை முன்வைக்கப்படுவது தவறல்ல. அது சாதகமாகப் பரிசீலிக்கப் படும்" - என்று பதிலளித்தார். (க)

சந்திரசேகரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது இன்றைய அரசியல் நிலைவரங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன் தமிழ்த தேசியத்தை உறுதியாகப்பேணுவதற்கு செய்யவேண்டிய பணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

தமிழ்க் கூட்டமைப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மக்களின் ஆணையை உரிய முறையில் நிறைவுசெய்ய உறுதி பூணவேண்டும். அதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்ற முன்வரவேண்டும். தமிழீழத் தேசியத்தை வளர்க்கவும், போராட்டத்தை வலுவூட்டவும் முன்னின்று உழைக்கவேண்டும்.

"தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் புலிகள்தான் என்பதை உலகிற்கு உணர்த்தியதற்காக உங்களுக்கு எனது வாழ்த்துக்களும், நன்றிகளும்"

"17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீர்களின் தியாகத்தாலும், அர்ப்பணிப்பாலும் நாம் இந்தப் பெருவெற்றியைப் பெற்றிருக்கிறோம். எம்முள் இருந்த சிறுசிறு முரண்பாடுகளை எல்லாம் மறந்து நாம் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரு பெரும் சக்தியாக நிற்பதையிட்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீண்டகாலமாகவே நாம் எமது ஒற்றுமைக்குறைபாட்டாலே எதிரிக்கு பல சந்தர்ப்பங்களை வழங்கியுள்ளோம் அண்மையில்கூட எமது போராட்டத்தில் இருள் சூழ்ந்தது. ஆனால், அதே வேகத்தில் அது கலைந்ததையும் நீங்கள் அறிவீர்கள். மட்டு.-அம்பாறைப் போராளிகளும், அங்குள்ளமக்களுமே இப்பிரச்சினைக்கு பெருமளவில் முகங்கொடுத்துத் தீர்வுகாண இணைந்த தோடு, எமக்குப் பூரண ஆதரவையும் தந்தனர். இதனாலேயே நாம் மிகவும் இலகுவாக இச்சிக்கலை வெல்ல முடிந்தது. இதில் எமக்குக் கிடைத்த வெற்றி இனிவரும் காலங்களில் சாதி, மத, பிரதேசவாதம் போன்ற குறுகிய வாதங்கள் எதுவும் எம்மக்களிடையே இருக்கப்போவதில்லை என்பதை எடுத்துக்காட்டியுள்ளது."

ஒவ்வொரு தனி மனிதனும் தன்னில், தனது குடும்பத்தில், தனது கிராமத்தில், தனது ஊரில், தனது பிரதேசத்தில், தனது நாட்டில் பற்று இருக்க வேண்டும். பற்று இருக்கும், அது தப்பில்லை. ஆனால், அந்தப்பற்று பிரதேச வெறியாக மாறிவிடக் கூடாது. அத்தகைய பிரதேச வெறியை முன்வைத்து அதைத் தனது சுயநலத்திற்குப் பயன்படுத்த சிலர் முயன்றதே தென்தமிழீழத்தில் சில விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கு இடமளித்தது.

அங்குள்ள மக்கள் 41 நாள்கள் இருண்ட வாழ்க்கையை வாழ வேண்டி நேரிட்டது. ஆனால், அப்பிரதேச மகக்ள் தங்களின் தேசியத்தின் மீது உறுதியும், அர்ப்பணிப்பும் மிக்கவர்களாக இருந்து அதன் வழியே செயற்பட்டதால், இருட்டிலிருந்து அந்த மக்களுக்கு மீட்சியையும், சந்தோசத்தையும் பெற்றுக்கொடுக்க முடிந்தது. சிங்கள அரசுத் தரப்பிலும் மக்கள் தரப்பிலும் பெரிய மனமாற்றம் ஏதுமில்லை. அதனை தேர்தல் முடிவுகள் நன்கு வெளிப்படுத்துகின்றன.

ஐ.தே.முன்னணியின் அரசோ அல்லது இந்தப் புதிய அரசோ இவையிரண்டுமே அவற்றின் அடிப்படை நிலைகளிலிருந்து மாறும் என நாம் நம்பவில்லை.

எனினும், எமது மக்களின் அபிலாஷைகளையும் விருப்பையும் நிறைவு செய்யும் தீர்வைப் பெறுவதற்காக நாங்கள் தொடர்ந்து சமாதானப் பேச்சுக்களில் - முயற்சிகளில் ஈடுபடத் தயாராக இருக்கிறோம். ஆனால், சிங்கள அரசு இது விடயத்தில் நேர்மையாக இருக்கின்றதா என்பதே கேள்விக்குறியினும், நாம் எமது சமாதான ஆர்வத்தை வெளிப்படுத்தும் விதத்தில் உறுதியோடு செயற்படுவோம். எங்களுக்குள் இருக்கும் சுயநலம், ஆசைகள் என்பவற்றை பொது நலனுக்காக விட்டுக் கொடுக்கப் பழகவேண்டும். நாம் துயரும் இல்லங்களில் இருக்கும் மாவீர்களின் கல்லறைகளைப் பார்ப்போமேயானால் இதனைப் புரிந்துகொள்ளலாம். மாவீர்கள் தமக்கென்று எதனையும் எதிர்பாராது மண்ணுக்கும், மக்களுக்கும் தமது கடமையைச் செய்து இருக்கிறார்கள். இவர்கள் போன்றே நாமும் எதனையும் எதிர்பாராது பொதுநலனுக்காக எமது கடமையைச் செய்ய வேண்டும்.

"எப்பொழுதும் எமது பிரச்சனைக்கு எமது பலம்தான் தீர்வைப் பெற்றுத் தரும்"

"உங்கள் பணிகளைத் திறம்படச் செய்ய மாவீர்கள் துணைநிற்பார்கள்" எனக்கூறித் தனது உரையை நிறைவு செய்தார்.

தமிழ் மக்களின் தேசியத்தைப் பேணவும், அவர்களின் அபிலாஷைகளை முன்னெடுக்கவும் அவர்களின் ஆணையைப் பெற்று வந்த நாங்கள் அதனை மேற்கொள்வதில் தளராத உறுதியுடன் செயற்பட வேண்டும் - என்றார் தலைவர் பிரபாகரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்கள் பலரும் இந்தச் சந்திப்பில் தமது கருத்துரைகளை வழங்கினர்.

தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான வழிவகைகள் குறித்தும் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை விடயம் பற்றிப் பேச்சு நடத்துவது குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் எம்பிக்களுடன் இணைந்து அவர் மதியபோசன விருந்தும் அருந்தினார்.

அதன் பின்னரும் எம்பிக்கள் கிளிநொச்சியில் தங்கியிருந்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

சுதந்திர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் கையாள வேண்டிய உத்திகள் மற்றும் ஆளும் கட்சியின் கொறடா, சபை முதல்வர், பிரதிச் சபாநாயகர் போன்ற பதவிகளுக்கு ஆள்களைத் தெரிவுசெய்தல் போன்ற விடயங்கள் குறித்து இன்றைய கூட்டத்தில் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.